ISSN: 2012-6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு






புனித யோசப்வாஸ் திருத்தலம் - இந்தியா






சமூகத் தொடர்பு நிலையத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கு





மே - 2017

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே – 2017

மலர் - 49 இதழ் - 04

ஆசிரியர்
அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

இணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

துணை ஆசிரியர்
பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு
சுபாஜெனி சங்கர்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

பதிப்பகம்
வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.



## உள்ளே...

அன்புடன் உங்களோடு ........ 01
மாதா மாதம் ........ 02
தூய யோசப்வாஸ் ஆண்டில் ........ 04
நாளைய திருச்சபை ........ 05
எண்ணிப்பார்க்கையில் ........ 06
புனிதர்களை அறிவோம் ........ 07
நா காக்க ........ 08
ஆமைகள் ........ 09
தீர்வு தேடும் நியாயங்கள் ........ 10
பெண்மைக்கு இலக்கியம் ........ 11
குறுங்கதை ........ 13
மருத்துவம் ........ 14
இதுதான் அரசியல் ........ 17
நல்ல காலம் பொறக்குது ........ 18
சின்ன விசயங்கள் சிறந்த ........ 18
கருத்தரங்கு ........ 19
அவரும் இவரும் ........ 20
மாணவர் பக்கம் ........ 22
தூய யோசப்வாஸ் ஆண்டு ........ 24
உலகெங்கும் மரியாள் ........ 25
கத்தோலிக்கத் திருமறை ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: battiscc@gmail.com

விலை : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன்

உங்களோடு....



கவிதைகள் பிறந்திட
கனவுகள் வேண்டும்
கடவுளைத் தொழுதிட
கரங்கள் வேண்டும்
கண்ணைக் காத்திட
இமை வேண்டும்
என்னைக் காத்திட நீ வேண்டும்
இறைவா உன் அருள் வேண்டும்

என்று இறை அருளுக்காக காத்திருந்த படியால்தான் அன்னை மரியாளை வானதூதர் "அருள் நிறைந்தவளே வாழ்க!" என்று போற்றினார். அன்னை யைப் போற்றும் வணக்க மாதத்தினுள் நுழை கின்றோம்.

அருளின் ஊற்றே
அன்பின் வடிவே,
எங்கள் தாய் மரியே
அன்பர் இயேசு உந்தன் மடியில்
வந்து பிறந்தாரே

என்று எண்ணும்போது உம் மேல் இறைவன் எவ்வளவு பிரியமாய் இருந்தார், இருக்கி றார் என்று புரிகின்றது. உம்மை அன்று வானதூதர் வணங்குமளவு உமது வாழ்நாள் இருந்தது போல எமது வாழ்நாளும் இருக்கும்படியாக எம்மையும் பார்த்து கானாவூர்த் திருமண வீட்டில் "அவர் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம் செய்யுங்கள்" என்று சொல்கிறீர்களே அம்மா. இந்த வணக்க மாதத்தில் உம்மைப்போல நாங்களும் இயேசுவின் மங்காத குரலுக்குச் செவிமடுக்க அதை வாழ்வாக்க முயற்சிக்கிறோம். உம் துணை வேண்டுமம்மா.

உம் பெருமை உலகம் அறிந்திட காரண மான இயேசுவின் அன்புப் பிள்ளைகள நாம் என்றும் வாழ ஆசைப்படுகின்றோம். உம்மைப்போல் எங்க ளால் இயேசுவை உதிரத்தில் தாங்கிட முடியாது. எனினும், எம் மனங்களில் தங்கிட உதவிடுமே அம்மா.

சிப்பி
முத்து எனக்கு சொந்தமென்று சொல்வதில்லை
தென்னை
இளநீர் எனக்கு சொந்தமென்று சொல்வதில்லை
மலர்
மணம் எனக்கு சொந்தமென்று சொல்வதில்லை

அதேபோன்று உம் மகன் உமக்குச் சொந்த மில்லை என்று சொல்லி உலகு வாழ அவரை முழுவ தும் கொடுத்தீரே. அதனால் இன்று உலகம் முழுவதும் இரட்சிக்கப்பட்டதே. நாமும் இரட்சிப்பின் பிள்ளை களாய் எங்கள் வாழ்வு எங்களுக்குச் சொந்தமில்லை அது இறை தந்தைக்கே சொந்தம் என்று வாழும் வரம் தருவீராக.

-- ஆமென்.

– ஆசிரியர் –




**தம் சீடரிடம் "இவரே உன் தாய்" என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.**

– யோவான் 19:27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதா மாதம்



திருவழிபாட்டு காலச் சக்கரத்திலே ஏப்ரல் மாதம் தவிர்த்து மற்ற எல்லா மாதங்களும் மரியன்னையின் விழாவுள்ள மாதங்களே. "மே மாதம்" என்றால் அது மாதா வணக்க மாதம் என்பதை நாம் அறிவோம்.

கத்தோலிக்கத் திருச்சபையின் வாழ்வு, வழிபாடு, விசுவாசக் கூறுகளில் மூன்றை முக்கியமாகக் கூறலாம். திருவருட் சாதனங்கள், மரியா பக்தி, புனிதர் வணக்கம்.

படித்தவர் - படிக்காதவர் என்ற பாகுபாடின்றி, அனைவராலும், அனைத்து மதத்தினராலும் அன்பு செய்யப்படுபவரும், பக்திப் பரவசத்துடன் போற்றப்படுபவரும், "ஆபத்துக்களில் துயர் துடைப்பார்" என்ற நம்பிக்கையுடனும் மக்கள் அண்டிச் செல்லக் கூடியவருமாக இருப்பவர் அன்பு அன்னை கன்னி மரியா!

"மரியன்னையின் புகழை எழுதினால் எழுத்தில் அடங்காது, பாடினால் அது பாட்டில டங்காது. காரணம், மரியாவின் புகழ் எழுத்துக்கும், இலக்கியத்துக்கும், கவிதைக்கும், காவியத் திற்கும் அப்பாற்பட்டது. மரியா திருச்சபையின் தாயும், மாதிரியும்" என்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

"தாயன்பை எடுத்துரைக்க உலக மொழிகளில் போதிய வார்த்தைகள் இல்லை" என்கிறார் ஓர் அறிஞர். அப்படியிருக்க உயிரில்லாக் கடவுளுக்கே உயிர் கொடுத்த மரியாவை எப்படிப் புகழாமல் இருக்க முடியும்?. "ஒரு மனிதனின் உடலிலுள்ள உறுப்புக்களெல்லாம் நாக்குகளாக மாறினும் மரியன்னையை அவருடைய தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது" என்கிறார் புனித அகுஸ்தினார்.

மரியன்னையின் அளவிட முடியாத அன்பும், அரவணைப்பும் வழிநடத்துதலும் கத்தோலிக்கத் திருச்சபையின் வாழ்வில் நம்பிக்கை கீதமாக ஒலிக்கின்றது. கன்னிமை குன்றா வாழ்வில் மரியா இறைவனுக்கே தாயாகும் பேற்றினைப் பெற்றவர். இத்தாயின் திருமகன் இயேசுவின் மறையுடலாம் திருச்சபை இத்தாயின் பக்தியிலும், இறைவார்த்தையிலும் வேரூன்றி, அருளடையாளங்கள் வழி தன்னைப்புனிதப்படுத்தி, எட்டுத் திக்கும் கிளை பரப்பி, அனைத்துலக மக்களுக்கும் அன்புப் பணியாற்றுவதை அறிந்தவர்கள், அனுபவிப்பவர்கள் நாம்.

"தாயில்லாமல் நானில்லை, தானே எவரும் பிறந்ததில்லை"! இந்த வரிகள் மனிதராய் பிறந்தவர்களுக்கு மட்டுமல்ல, கடவுள் மனிதராய் பிறந்த போது கடவுளும் இதற்கு விதிவிலக்காக வில்லை என்பதை புனித பவுலடியார், "காலம் நிறைவேறியபோது ..... கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்" (கலா 4:4-5) என்கிறார். காலம் காலமாய் காத்தி

**- பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா -**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து காலம் நிறைவேறியபோது கடவுளின் கண்களில்பட்ட கறைபடியாத "மரியா" என்ற பெண்தான் கடவுளின் தாயாகும் தகுதியுடைய வராக்கப்பட்டார்.

மரியா அனைத்து அருள்வளங்களையும் மொத்தமாய்ப் பெற்றிருந்த பத்தரைமாற்றுத் தங்கம் என்பதைக் கடவுள் கண்டு "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" (லூாக். 1:28) என்று தமது வானதூதர் வழியாக வாழ்த்துகின்றார். இறைவனின் மிகச்சிறந்த படைப்பான "மரியா" வின் பெயரைப் புகழ்ந்து கொண்டாடுவதில் தவறேதும் இல்லை. "இது முதல் எல்லாத் தலை முறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூாக். 1:48) என்ற இறைவாக்கு வழியாக உண்மையாகிறது. இதைத்தான் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் "மே" மாதத்தை மாதா வணக்க மாதமாகக் கொண்டாடுகின்றனர்.

இப்படி 2017 ஆண்டுகளாக ஞானிகள், அறிஞர்கள், எளிய விசுவாசிகள் இறைவனின் தாய் மரியாவிற்கு அளித்து வரும் வணக்கத்தை, மரியா வழியாக இயேசுவிடம் என்னும் இறை யாட்சிப் பயணத்தின் அர்த்தத்தை, ஆழத்தை மே மாதம் மேரி மாதம் என்பதால் செபமாலை செபித்து, வணக்கமாத மன்றாட்டு மாலை பாடி, தியானித்து மரியா வழியாக இயேசுவிடம் நெருங்கி வருவோம்.

மரியன்னையின் காட்சிகளில் மரியா செபமாலையுடன் தோன்றி 'தினமும் செபமாலை செபிக்க வேண்டும்' என்று மக்களைப் பணித்துள் ளார். கூடி செபமாலை செபித்த குடும்பங்கள் கோடி நன்மை பெற்றுள்ளன. திருச்சபையின் வாழ்விலும் நமது தனிப்பட்ட தகர்க்க முடியாத தப்பறையான போதனைகளையும், தடைகளான பாறைகளையும் தகர்த்ததும், இறை உறவில் நம்மை ஆழப்படுத்தியதும் செபமாலைப் பக்திதான் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

மே மாதம் 'மேரி மாதம்' என்பதால் மே மாதத்தில் மட்டுமல்ல மரியா இறைவனின் தாய், இயேசு ஆண்டவரின் தாய், அவரே நமக் களித்த கருவூலக்கொடை. மரியா நம் தாய் என்ற உணர்வுடன், உயிருள்ள இறை நம்பிக்கை யுடன் மரியன்னை வணக்கத்தை, இயேசுவை யும், அவரது மீட்பின் மறையுண்மைகளையும் ஆழமாக அறிய உதவும் அருட்கருவியாகக் கருதி அனுதினமும் அன்னை மரியாவிடம் செபிப்போம். மரியன்னையின் புகழ்ச்சியில் மானிட வாழ்வு மீட்படைய இயேசு சித்தம் கொண்டார்.

இந்த ஆண்டு மரியாள் பாத்திமாவில் மூன்று சிறுவர்களுக்கு அளித்த காட்சியின் நூற்றாண்டு விழாவை (மே - 13) சிறப்பிக்கின்ற வேளையிலே எமது மறைமாவட்டத்திலும் அம்பாறை, இக்கினியாகலை பாத்திமா திருத் தல நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கத் திட்ட மிட்டுள்ளோம். எனவே, இக் கருத்துக்களோடு இம் மாதத்தில் தினமும் குடும்பச் செபம், மாலையில் ஆலயத்தில் செபமாலை செபித் தல், மரியன்னையின் புகழ் மாலையைப் பாடு தல் போன்ற நற்செயல்களால் அன்னையைப் போற்றுவோம். மலர் மாலைகள் சாற்றுவோம். வேண்டும் வரங்களைத் தட்டாது தருவார் அன்னை மரியா. ●

*மட்/ மறைக்கல்வி நடுநிலையம் நடாத்தும்*

## அஞ்சல் வழி திருவிவிலியம் கற்போம்

**இரண்டு வருடத்தில் முழு திருவிவிலியத்தையும் தபால் மூலம் கற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்**

**நீங்கள் செய்யவேண்டியது:**

1. இரண்டு வருட முழுவிவிலிய பாடத்திட்டமானது 21 புத்தகங்களை உள்ளடக்கியதாகும்.
2. ஒவ்வொரு மாதமும் ஒரு புத்தகம் உங்கள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதை வாசித்து அதன் பின்புறத் திலுள்ள வினாக்களுக்கு விடை எழுதி அனுப்பவேண்டும்.
3. உங்கள் விடைத்தாள் பெற்றுக்கொண்டதும் அடுத்த புத்தகம் அனுப்பிவைக்கப்படும்.
4. தபால் மூலம் இதைக் கற்றுக்கொள்ள இரண்டு வருடத்திற் கான முழுக்கட்டணம் 700 ரூபா மட்டுமே. (இரண்டு தவணை முறையிலும் பணம் செலுத்தலாம்.)
5. தயவுசெய்து உங்கள் காசுக்கட்டளையில் "மட்டக்களப்பு தபால் நிலையம்" என குறிப்பிடவும். நேரடியாகவும் கட்டலாம்.
6. கீழுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து காசுக் கட்ட ளையை யும் இணைத்து நேரடியாகவோ அல்லது தபால் மூல மாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி திருவிவிலியக் கல்வி**
**மறைக்கல்வி நடுநிலையம்**
**இல. 52, வெபர் வீதி, மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசப்வாஸ் ஆண்டில் புனித யாத்திரை

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்ரி,
இயக்குநர், தூய யோசேப்வாஸ் ஆணைக்குழு,
மட்டக்களப்பு.

தேசிய தூய யோசேப்வாஸ் ஆணைக் குழுவானது கடந்த பங்குனித் திங்கள் 30ந் திகதி முதல் சித்திரைத் திங்கள் 4ந் திகதி வரையான காலப்பகுதியில் தூய யோசேப்வாஸின் பிறந்த மண்ணாகிய கோவா நகருக்கு, குழு தலைவரான தேசிய தூய யோசேப்வாஸ் ஆணைக்குழுவின் இயக்குநரான கண்டி மறைமாநில ஆயர் பேரருட்திரு. கலாநிதி. வியான்னி பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் 4 குருக்களடங்கலாக 50 பொது நிலையினரும் இலங்கை மண்ணிலிருந்து புறப்பட்டோம். மங்களூர், கோவா ஆகிய இடங்களில் அமைந்துள்ள தூய யோசேப்வாஸின் திருத்தலங்களைத் தரிசித்தோம். 1711ம் வருடம் பிறந்தவர் இவர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் 2015ம் வருடம் தைத்திங்கள் 16ந் திகதி புனிதர் பட்டத்திற்கு உயர்த்தப்பட்டார். இப்புனிதரைப் பற்றிய அதிகமான விடயங்களை அறிய முடிந்தது. தான் குருவாகிய நிலையில் வாழ்ந்த போதே புனிதராக வாழ்ந்தவர். பிச்சையெடுத்தவர். வெற்றுக்கால்களுடன் அனைத்து இடங்களுக்கும் கால்நடையாகவே சென்று சேவை செய்தவர்.



ஒரு புதுமையான விடயம், இவர் காடுகளிலெல்லாம் சுற்றியவர். ஆனால், விஷ ஜந்துக்களால் எவ்விதத் தீங்குமே இவருக்கு நிகழ்ந்ததில்லை. அதேவேளை, இவர் “எந்தவொரு குருவும் பாம்பு தீண்டி மரிக்கமாட்டார்கள்” என்று வாக்குறுதி கூறியபடியே இன்றுவரை எந்தக் குருவும் பாம்பு தீண்டி இறக்கவில்லை. பாம்பு தீண்டினாலும் குணமாகிவிடுவார்கள். இத்தகைய புனிதரின் புதுமைகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இன்னுமொரு விடயம், ஒருமுறை இவரைக் கொல்வதற்காக அழைத்துச்சென்றபோது, இவர் அந்த இடத்தில்தான் செபிக்கவேண்டுமென உத்தரவு பெற்றுச் செபித்தார். மண்டியிட்டுச் செபித்த அந்த இடத்தில் மூன்று நீரூற்றுக்கள் வெளிப்பட்டன. தண்ணீரே இல்லாத இடமது. அந்த நீரால் பலர் குணமடைந்து நன்மையடைகின்றனர். இதற்கு அருகிலேயே வெட்டப்பட்டுள்ள கிணற்றில் நீரே தென்படவில்லை. இப்புனிதர் சிறுவனாக இருந்தபோது, இரவுவேளையில் 12 மணியளவில் ஒவ்வொருநாளும் வெளியே செல்வது கண்டறியப்பட்டதால், ஒருநாள் இவரது தந்தை இவரைப் பின்தொடர்ந் தார். அவர் ஆலயத்திற்குச் சென்றார். அந்த ஆலயக் கதவைச் சாதாரணமாகத் திறக்கமுடியாது. பாரமானது. சிலர் சேர்ந்துதான் மூடுவதற்கும், திறப்பதற்கும் முடியும். ஆனால், தூய யோசேப்வாஸ் கதவுக்கு முன்னே சென்றதும், அது தானாகவே திறந்ததை இவர் தந்தை கண்டு ஆச்சரியப்பட்டார். சிறுவன் சென்று செபிக்கத் தொடங்கினான். கோவாவில் புனிதர் பிறந்த இடம், அவர் வாழ்ந்த வீடு, திருமுழுக்கு பெற்ற ஆலயம் என்று இவற்றைச் சென்று பார்த்தது வெறும் புனித யாத்திரையாக மட்டுமல்லாது புனிதர் மீதான பக்தியையும் அதிகரிக்கச் செய்ய உதவியாயிருந்தது. வாய்ப்புக் கிடைப்பவர்கள் தம் வாழ்நாளில் ஒரு தடவையாவது அங்கு சென்று அவர் மண்டியிட்டுச் செபித்தபோது தோன்றிய நீரூற்றுக்களைக் கண்டுவரவும், புனிதரின் ஆசிர்பெற்றுத் திரும்பவும் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய திருச்சபை

- அருட்சகோதரி. லூர்ட்ஸ் F.M.M -

"வாங்கடா, இண்டைக்கு லீவுநாள் தானே? நல்ல ஜொலியாப்போய் கடக்கர ஓரமா இருந்து பார்ட்டி ஒண்டு போடுவம்."

இது மோகனின் வேண்டுகோள். நண்பர்கள் அனைவரும் ஒரே குரலில்

"நல்ல ஐடியாடா" என்றனர். "மோகன்! நீ பணக்காரப் பையனாச்சே. இண்டைக்கு எல்லாம் உன்ட செலவுதான் சரியா?" என்றான் ரவி.

"சரி, சரி. அதெல்லாம் நான் பாரத்துக்கொள்றன். டேய் ரவி! உனக்குத்தான் நல்ல ஹோட்டல்களத் தெரியும். வா போவம்" என மோகன் சொல்ல, ரஞ்சன், ரகு இருவரும் "நாங்களும் வாறம்" என்றனர். எனவே, மோகன், ரவி, ரஞ்சன், ரகு நால்வரும் ரவி காட்டிய "அருனோதயம்" ஹோட்டலுக்குச் சென்றனர்.

ரவி முதலாளியுடன் நன்கு பழகியவன். அவரை அணுகி,

"ஐயா, எங்களுக்கு ஒரு பத்து புரியாணிப் பார்சல்கள் வேணும்" என்று சொல்ல, முதலாளி "குட்டி! இங்க வா. இவர் கேக்கிறபடி நல்ல புரியாணிப் பார்சல் பத்து கொணர்டுவந்து குடு" எனத் தன் பணியாளருக்குக் கட்டளையிட்டார். ரவி குட்டியிடம்


"நல்லாப் பொரிச்ச
கோழி இறைச்சி, வெங்காயச்
சம்பல், நல்ல உறைப்புக்
குழம்பு, சட்னி,
கத்தரிக்காய்க் கறி,
அதோட கட்லட்,
பப்படத்தையும் மறந்திடாத" என்று மெனுவைக் கூறினான்.

இரண்டு மணித்தியாலத்திற்குள் பார்சல்கள் தயாராகிவிட்டன. நான்குபேரும் நேரே கடற்கரைக் குச் சென்றனர். அங்கு மோகன் வீட்டு வேலை யாள் அழகனிடம் ரகு

"எல்லாத்தையும் பத்திரமாகப் பார்த்துக்கொள் அழகு. சாராயப் போத்தல்களும், கொக்காகோலாவும் மிச்சம் கவனம்" என்று கூறினான். பின்னர் மோகன்,

"வாங்கடா முதலில கடலில குளிப்பம்" என்று கூற எல்லோரும் கடலை நோக்கிச் சென்றனர். குளித்து முடித்து உடைகளை மாற்றிக்கொண்டு வந்து மணலில் அமர்ந்து பேசி மகிழ்ந்தனர். சாராயம் மற்றும் கொக்காகோலா வெறும் போத்தல்களாகத் தரையில் உருண்டோடின. சாப்பாட்டுப் பார்சல்கள் தீர்ந்தன. நடனமாடத் தொடங்கினர்.

"உண்டனக்கா னக்கா னக்கா எங்க தல எங்க தல ரியார் யாரு...?", "ஆலுமா..... டோலுமா கஸ்தலக்கடி மாலுமா ....", "போன உசிரு வந்திருச்சி
ஒன்ன தேடி
திருப்பித்
தந்திருச்சி ..."



பாடல்களுடன் ஆடலும் சூடுபிடித்தன.

இப்படியே மாதம் ஒரு தடவை பல இடங்களிலும் பார்ட்டி போட்டனர். நல்ல உழைப் பாளியான மோகனின் பணம் பரிதிமுன் பனிபோல் கரைந்தோடிக்கொண்டிருந்தது. எனவே, தந்தையி டம் சொல்லப் பயந்து வீட்டை விட்டு வெளியே றித் தொழில் தேடி அலைந்தான். நண்பர்கள் கைவிரித்தனர். தப்பித்தோம் பிழைத்தோம் என விலகிவிட்டனர். மோகனைக் கண்டதும் ஒளித்த னர். மனமுடைந்தவன் ஒரு தேநீர்க் கடையில் வேலை கிடைத்தபோது மகிழ்ந்தான். அங்கு கிடைத்த சம்பளம் அரைவயிற்றுப் பசியையே போக்கியது. அங்கும் தொடர்ந்து வேலைசெய்ய முடியவில்லை. விலக்கிவிட்டனர். வேறிடம் சென்றான். ஒரு கோழிப் பண்ணையில் இலிகிதராக வேலை கிடைத்தது. பெயரளவில்தான் இலிகிதர். ஆனால், வேலையில் சேர்ந்தபின்தான் எல்லா வேலைகளும் இவனே செய்யவேண்டும் எனத் தெரிந்தது. மனம் நொந்தான். அங்கு வருமானமும் குறைவு. கால் வயிறு நிரம்புவதே சிரமமானது. தன்னை நொந்துகொண்டான். அருகிலிருந்த ஆலயத்தில் திருப்பலிக்கு மணி ஒலித்தது. இதுவரை ஆலயத்தை நாடாதவன் திருப்பலி என்றால் முகஞ் சுழிப்பவன். பங்கு வேலைகளில் இருந்து நழுவுபவன். அவனது சிந்தனை சிறகடித்துப் பறந்தது. தன் வாழ்வைப் பின்னோக்கிப் பார்த்தான். புத்தி தெளியத் தொடங்கியது. தன் அழுக்கு ஆடைகளை நோக்கினான். ஒரு தீர்மானத்துடன் அங்கிருந்த வேலைக்காரனிடம் சுத்தமான ஒரு ஆடையை வாங்கி அணிந்துகொண்டு ஆலயம் சென்றான். அழுதான். தன் வீட்டிற்கே செல்லத் தீர்மானித்தான். மறுநாள் தந்தையை அவரது அலுவலகத்தில் சந்தித்தான். அவர் எதுவும் பேசாது தன் மகன் எனும் பாசத்துடன் மீண்டும் ஏற்றார் அவனை.

இன்றைய உலகிலே பெற்றவரை மதிக்காமல், பங்கில் ஈடுபாடற்றுத் திரியும் மோகன் போன்ற எத்தனையோ பேரைக் காணமுடிகிறது. மனம்போன போக்கில் வாழ எந்தப் பெற்றோரும் சொல்லி வளர்ப்பதில்லை. அத்துடன் எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கும்போது நல்ல குழந்தைதான். ஆனால், காலப்போக்கில் உலகக் கவர்ச்சியால் தறிகெட்டலைந்து பெற்றோரை மதிக்காமலும், இறைவனை நாடாமலும் திரிகின்றனர். ஆலயம் செல்வதில் விருப்பமில்லை: செபிப்பதில் ஈடுபாடில்லை: இவ்வாறு வாழ்வதால் எப்பயனும் இல்லை என உணர்வதுமில்லை. இறுதி நாளில் என்ன நடக்கும் என்று சிறிதும் சிந்திக்காமல், பாதை தவறி வாழ்கின்றனர்.

இவர்கள் மனமாற்றம் பெற்றால் நல்லது. அதனால் நல்லதே நடக்கும் என இவர்கள் நம்பவேண்டும். நிஜ வாழ்வுக்குத் திரும்ப வேண்டும். திருச்சபை எதிர்பார்ப்பதும் இதுதான். ஏனென்றால், நாளைய திருச்சபை இவர்கள் கைகளில்தான்.

## என்னைப்பார்க்கையில்...

நாம் வாழ்வில் எவ்வளவோ
பொய்களைச் சொல்லியிருப்போம்
கேட்டுமிருப்போம்!
நாம் சொல்பவை பொய்கள் என்று நாம்
தெரிந்து சொல்வதைப்போல
பிறர் சொல்வதும் பொய்தான் என்று நாம்
உணர்ந்தும் கேட்டுக்கொண்டிருப்போம்
சமயத்தில் மனம் பொறுக்காமல்
வாய்விட்டே சொல்லியுமிருப்போம்.
வேளையில் பொய்கள் எம்மைக்
காப்பாற்றினாலும் நீண்ட காலத்திற்கு
அவைகள் நம்மைக் காக்கப்
போவதில்லை. அசடு வழிய
தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு
நிற்கச் செய்து விடும் அவை!
உண்மையாக எண்ணிப் பார்க்கையில்...
பொய்கள் எதையும் சரிசெய்வதில்லை
எதையும் அவை சுலபமாக்குவதுமில்லை.
உண்மையைப் பேசி நேர்மையாக
தவறுகளைத் திருத்திக் கொள்வது
நம்மைத் தலை நிமிர்ந்து
வாழவைக்கும் என்பது புரியவரும்!

### பொய்கள் என்றும் பொய்களிதான்!



ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்

மே - 2017



மற்றில்டா இராஜேந்திரம்

## மே 07ந் திகதி : பெவர்லி நகர் புனித ஜோன்




இங்கிலாந்து நாட்டில், ஹர்போம் எனுமிடத்தில் பிறந்தவர் ஜோன். இவரின் பெற்றொர் சமூகத்தில் நன் மதிப்பும், இறைபக்தியம் நிறைந்தவர் களாக இருந்தார்கள். தம் மகனை சிறு வயது முதல் பாசமும், அரவணைப்பும் காட்டி வளர்த்தனர். கன்டர்பெரி பேராயர் தியோடோர் இவருக்கு நல்வழிகாட்டினார். இவர்தான் ஜோனுக்குக் கல்வி கற்பித்தவர். படிப்பு முடிந்ததும் ஆசிர்வாதப்பர் சபையில் சேர்ந்து துறவியாகி, சில காலம் விட்பியில் உள்ள புனித ஹில்டா துறவு இல்லத்தில் தங்கினார் ஜோன். நாட்களாக மிகச் சிறந்த போதகரானார். மறைநூலை இவர் விளக்கிக்கூறும் பாங்கு எல்லொரையும் இவர் பக்கம் ஈர்த்தது. ஜோன் 687ம் வருடம் ஆவணித் திங்கள் 25ம் நாளன்று ஹெஸ்காம் ஆயராகத் திருப்பொழிவு பெற்றார். இப்பகுதி இவருக்கு முற்றிலும் புதியது. என்றாலும் 18 வருடங்கள் இறையரசின் நற்செய்தியை மக்களுக்குப் போதித்து எண்ணற்றோரை மனந்திருப்பினார். யோர்க் நகரப் பேராயர் போசா இறந்ததால் 705ம் வருடம் யோர்க் மறைமாவட்டம் பேராயராக நியமனம் பெற்றார். கணக்கற்ற புதுமைகள் செய்து மக்களால் விரும்பப்பட்ட பேராயராக இருந்த இவர் தனது புனித வாழ்வு, காட்சித் தியானம் ஆகியவற்றால் தன்னை அழைத்த இறைவனை மகிமைப்படுத்தினார். ஏழைகளுக்கு வழிகாட்டியதுடன், மாணவர் தம்து வாழ்வின் இலக்கைத் தெரிந்துகொள்ளச் செய்வதிலும் கவனம் செலுத்தினார். உடல்நலம் குறைந்தபோது தமது பதவியிலிருந்து விலகி 717ம் வருடம் பெவர்லி நகரிலிருந்த துறவு இல்லத்தில் தங்கி ஓய்வெடுத்தார். இவ்வில்லம் இவராலேயே அமைக்கப்பட்டதாகும். அங்கேயே 721ம் வருடம் வைகாசித் திங்கள் 7ம் நாளன்று இறையடி சேர்ந்தார். வாழும்போதும், இறந்த பின்பும் பல புதுமைகளைப் புரிந்த ஜோன் 1037ம் வருடம் திருத்தந்தை 9ம் பெனடிக்ற் அவர்களால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

## மே 21ந் திகதி:-புனித விக்டர்




உரோமைப் படைப்பிரிவின் மிகச் சிறந்த போர்வீரராக மார்செய்ல்ஸ் என்ற இடத்தில் பணியாற்றியவர் விக்டர். திறமை மிகுந்த வீரராகவும், வலிமை மிகுந்தவராகவும் விளங்கிய இவரை எல்லோருக்கும் பிடித்தது. இவரது அறிவாற்றலால் முக்கிய பொறுப்பும் வழங்கப்பட்டது. பேரரசரின் அன்புக்கு உரியவராயிருந்தும் இவர் கிறிஸ்தவ மறையைத் தழுவினார். உரோமைத் தெய்வங் களுக்குப் பலி செலுத்த மறுத்து அவை வெறும் கற்களே என்றும் கூறினார். இவருடைய எதிரிகள் சரியான நேரம் பார்த்து இவரைக் கைது செய்தனர். பேரரசர் மக்சிமியான் முன் நிறுத்தப்பட்டபோது அவன் உரோமைத் தெய்வத்தை வணங்கும்படி சொன்னான். அவர் மறுத்தார். அடித்தனர். என்றாலும் .....

தொடர் 15ம் பக். ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நா  காக்க

— றெ. சிதம்பரி —

உலகில் மனிதன் கொடூரமான சிங்கத்தையும், சிறுத்தையையும், மகா பெலனுள்ள யானையையும், பறவைகளையும் தனது உபயோகத்திற்கு ஏற்றவாறு அடக்கி ஆளுகிறான். ஆனால், தனது நாவை மட்டும் அடக்கியாள அறியாதிருக்கிறான். மனித வாழ்வின் பெரும்பகுதிப் பாவங்கள் வாயினால் வருகின்றன. உலகில் பழக்குவதற்குக் கடினமான அவயவம் ஒன்று உண்டென்றால் அது நாவுதான். உண்மையாகவே நாவைக் காக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான் (நீதிமொழிகள் 21:23). குதிரைகள் கீழ்ப்படியும்படி அவைகளின் வாய்களுக்கு கடிவாளமும், கண்களுக்கு கலிங்கமும், கப்பல்களைத் திரும்புவதற்குச் சுக்கானும் பாவிக்கப்படுகின்றன. ஆனால், இந்த மனித நாவுக்கு...? நமது நாவு மிகச் சிறியதுதான். எலும்பில்லாததாக இருந்தாலும், எப்பக்கமும் சுழலும் தன்மையுள்ளது. இயற்கையிலேயே கடவுள் நாவுக்கு முக்கியமானதொரு இடத்தைக் கொடுத்துப் பாதுகாப்பிற்கு 32 பற்களையும் வைத்து எப்போதும் தண்ணீருக்குள் போட்டு வைத்துள்ளார். பாஸ்பரம் என்ற வேதியல் பொருளைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்த சில வினாடிகளில் தீப்பிடித்துவிடும். அதுபோலவேதான் நமது நாவு சிறியதாயினும் சரீரத்தையே கறைப்படுத்தி வாழ்க்கைச் சக்கரத்தையே மாற்றிவிடும். ஓர் சிறிய நெருப்புப்பொறி ஒரு காட்டையே கொழுந்துவதைப்போல.

சாதாரணமாக ஒரு ஆண் ஒரு நாளைக்கு 28 ஆயிரம் வார்த்தைகளும், ஓர் பெண் 32 ஆயிரம் வார்த்தைகளும் பேசுகிறார்கள் என அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். சில வார்த்தைகள் அன்புள்ளவை. அதிகமான வார்த்தைகள் சர்ப்பத்தின் விஷம்போல இருக்கும். இதனால் உறவுகள் உருக்குலைந்து போவதும் கண்கூடு. "சோறு கீழே விழுந்தால் பொறுக்கிவிடலாம், சொல் கீழே விழுந்தால் எடுக்கமுடியுமா?", "பேசின சொற்களுக்கு நீ அதிகாரி, பேசிவிட்ட சொற்களுக்கு உன் எதிராளி அதிகாரி", "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்பவற்றுக்கொப்ப வார்த்தைகள் துப்பாக்கியிலிருந்து வெளிவரும் குண்டு போல உள்ளங்களைக் காயப்படுத்துகின்றன.

"ஆண்டவரே என் நாவுக்குக் காவல் வைத்தருளும்; என் இதழ்களின் வாயிலில் காவலாளியை வைத்தருளும்" என்று செபம் செய்த தாவீதைப் பார்க்கிறோம் (தி.பா. 141:3). நம்மவரிடையே அடங்காத வாயாடிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். சில இடங்களில் லிப்டில் ஏறியதும் "தயவுசெய்து கதவை மூடவும்" என்ற சத்தம் கேட்கும். சிலர் தம் மனைவியரைப் பார்த்து தயவு செய்து வாயை மூடவும் என்று சொல்வதும் இதனால் பெரிய விபரீதங்கள் ஏற்படுவதையும் நாம் காண்கி றோம். "நாவடக்கம்" என்னும் தலைப்பில் திருவள்ளுவரும், "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்றும், "இனிய உளவாக இன்னாது கூறல், கனியிருப்பக்காய் கவர்ந்தற்று" எனவும் கூறுகிறார். இதே கருத்துக்களை நீதிமொழிகளில் சாலமோன் கூறுவதையும் (நீதிமொழிகள் 16:28-17:9) பார்க்கிறோம்.

நாவைப் பார்த்துச் சரீர நோயைக் கண்டு பிடித்துவிடலாம். வெற்றிவாழ்க்கை வாழ்வதற்கு நாவைப் பழக்கிக்கொண்டால் ஆன்மாவைக் காப்பாற்றிவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். நாவினால் பாவம் செய்யாதபடி வாய்க்குக் கடிவாளமிட்டு அடக்கிக் கொள்ளுதல் நலமானது. ஒருவன் கண்ணிகளில் சிக்கிக்கொள்வதற்கு முக்கிய காரணம் அவனது வாயும், உதடுகளும், நாவுமேயாகும். ஓர் சித்திரம். அதில் ஓர் மீன் தன் வாயைத் திறந்து தூண்டிலில் கொழுவியிருந்த புழுவை நோக்கித் தீவிரமாகச் செல்கிறது. அதன் கீழ் "அந்த மீன் தனது வாயைத் திறவாதிருந்தால் கண்ணிக்குத் தப்பியிருக்கலாம்" எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. இதுபோல் சில வாசகங்களுமுண்டு. பேசாதே, பேசினால் சுருக்கமாகப் பேசு. நல்ல வார்த்தைகளைப் பேசு. ஞானமாகப் பேசு. சாந்தமாகப் பேசு. இப்படிப் பலவற்றைத் தொடரமுடியும். நல்ல வார்த்தை ஒன்று நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டுசெல்லும். தீய வார்த்தை பாதாளத்திற்குக் கொண்டுசெல்லும். இயேசு அன்போடு பேசினார். அதிகாரத்தோடு பேசினார். சிலவேளைகளில் கண்டிப்போடு பேசினார். அவர் ஒருபோதும் தாம் பேசியதைக் குறித்து "வருந்துகிறேன்" என்று கூறவே இல்லை. அவர் தமது சீடர்களிடம் "என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என நீங்கள் கவலைப் படவேண்டாம். நீங்கள் என்ன பேசவேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்" என்பதை மத். 10:19, 20 இல் காண்கிறோம். ஆகவே, அன்போடும், அளவோடும் பேசுவோம். போற்றுவதும், தூற்றுவதும் ஒரே நாவால் இருத்தலாகாது என்பதைக் கருத்தில் கொள்வோம். ▲

# ஆமைகள்

**- கலாபூஷணம் நிலா தமிழின்தாசன் -**

பொறாமை நெஞ்சினுள் புகுந்திடில்
புரியாமை, அறியாமை - எதையும்
தெளியாமைக் குஞ்சுகள் பிறந்து நெளியும் ...
ஆமையும் முயலும் ஓட்டப் போட்டியில்
ஆமை வென்றதாம்!
முயல் தோற்றதாம்!
இக்கதைக் கருத்தில் எனக்கோ ஒவ்வாமை
உண்மைக் கருத்தைத் தேராமை, கூறாமை
உரைத்தால் வருவது இயல்பே ஒவ்வாமை.
ஓட்டினை முதுகிற் சுமந்தாலும்
ஓட முடியா ஆமையுடன்
புயலாய் ஓட வல்ல முயல் - இணங்கி
போட்டியிடுதல் தகுமாமோ? - எனவே
முயலின் உள்ளப் பெருந்தன்மை
தயவுடன் ஆமைக்கிடங்கொடுத்து
தான் போய்ச் சுகமாய் உறங்கியது - இதனால்
ஓடிவென்றால் படுதோல்வி! படுதோல்வி!
இதுதான் உண்மை தங்கச்சி!
வேண்டாம் உனக்குப் புரியாமை
போட்டிக்காளே இல்லாமல்
ஓடாதோடிய ஆமைக்கும்




பாவம்! கிடைத்ததோ படுதோல்வி
மனித வாழ்வும் "ஆமைகளால்"
புனிதம் இழப்பதைப் பார்த்தாயா!
ஒற்றுமை காக்கத் தெரியாமை
உயர்வு பெற்றிட உழையாமை
கற்றிடும் நலங்கள் கல்லாமை
கற்றும் அறிவுகைக் கொள்ளாமை
அன்பை நெஞ்சில் வளர்க்காமை - உலகில்
ஆயுதப் போரை ஒழிக்காமை
பெரியோர் தம்மை மதிக்காமை
பெண்ணின் பெருமை உணராமை
நேர்மையோடு வாழாமை
நெஞ்சில் உறுதி வளராமை
ஆயிரம் ஆமை உரைத்திடலாம்!
இயலார் நெஞ்சின் 'பொறாமை பார்!
இதுதான் உலகில் பெருந்தீயாம்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீர்வு தேடும் நியாயங்கள்



## ஓர் கண்ணோட்டம்

திரு. V. கண மகேஸ்வரன் யாழ்ப்பாணம் நெல்லியடியில் வசிப்பவர். இவர் "வீக்கேயெம்" மற்றும் "மணி மணாளன்" போன்ற புனைபெயர்களில் பல்லாண்டுகளாகத் தம் சிந்தனைகளை, மனப் பதிவுகளை எழுத்தில் வடித்து வரும் சிறந்த எழுத்தாளர். இவர் 18.02.2017 அன்று தனது 2வது சிறுகதைத் தொகுதியான "தீர்வு தேடும் நியாயங்கள்" எனும் நூலை வெளியிட்டுள்ளார். இது 2016ம் வருடத்திற்கான ஜீவ நதியின் 68வது வெளியீடாக வந்துள்ளது.

நூலாசிரியர் 1982 முதல் 1984 வரை "தாரகை" யின் ஆசிரியராகவும், அத்துடன் மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலைய வெளியீடான "தொண்டன்" சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் 1989 முதல் 1993 வரையும் பணி புரிந்துள்ளார்.

1992ம் வருடம் தாரகை வெளியீடான 'மலரும் வாழ்வு' எனும் குறுங்காவியத்தையும், 1994ம் வருடம் உதயம் பிரசுரமானது "எல்லை வேம்பு" எனும் சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. இவரது சமீப வெளியீடான "தீர்வு தேடும் நியாயங்கள்" என்ற சிறுகதைத் தொகுதி என் கரம் கிடைக்கப்பெற்றது. வாசிக்கும்போதே மனதைத் தொடும் மனித வாழ்வின் பல பரிமாணங்கள் என் மனக் கண்முன் விரிந்தன. 12 குறுங்கதைகளான அத்தனையும் முத்துக்களாகவே தென்படுகின்றன.

வாழ்வில் ஏற்படும் பாச உணர்வுகளுடன் மனக் கவலைகள், கஷ்டங்கள், சந்தேகங்கள், உணர்வுச் சிக்கல், கோபம், சண்டை, ஏற்றுக்கொள்ளல், புரிந்துணர்வு போன்ற குடும்பங்களை வாழவிடாமல் செய்யும் பல பண்புகளை ஆணித்தரமாக முன்வைக்கும் இவரது வார்த்தைப் பிரயோகங்கள் சில இடங்களில் ஆழமிக்கவையாகக் காணப்படுகின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன. இக் கதைகளை வாசிக்கையில் இவரது உள்ளப்பதிவுகளையும், தாக்கங்களையும் அறியமுடிவதுடன், தமிழர் தம் வாழ்வின் மறக்கமுடியா வரலாற்றுப் பதிவுகளையும் காணமுடிகிறது.

"அப்பாச்சி" எனும் கதை பேரப்பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள், பாசம், கோபம், ஏக்கம் போன்றவற்றைச் சித்திரிக்கின்றது. பக்கவாதம் வந்து படுக்கையான அப்பாச்சி மீது சிறுவர்களின் பாசம், அவர் குணமாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. ஆதிக்கம், தனிக்குடித்தனம் ஆகியவை இல்வாழ்வு ஒன்றும் மலர் தூவிய மஞ்சமல்ல. நெளிவு, சுழிவுகள் மிக்க முட்பாதை என்று நினைக்க வைக்கின்றன. அத்துடன் அவற்றுக்கான தீர்வுகளையும் வித்தியாசமான கோணங்களில் நமக்குத் தருகிறார். "தன் பிழையை உணர்ந்து வசீகரன் வாழ்க்கைச் சுமையைத் தாங்கமாட்டாமல் ...... இனி நான் கண்கலங்க விடமாட்டன்" என்ற வசனத்தில் தீர்வையும் காட்டுகிறார். தனிக்குடித்தனத்தில், "அப்பாவுக்கு டீ வேணுமெண்டு அம்மாவுக்குச் சொல்லு" என்ற வசனத்தில் ஆதிக்கத்தில் புயலுக்குப் பின் அமைதி என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார். மகரகமவில் உயிரோடு போராடும் மனைவியைச் சென்று பார்க்கமுடியாத அவலம் 'அவஸ்தை' யில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. மண்ணும் மனையும் எனும் கதையில் "என்னடா மோனை, ராத்திரி கெற்பக் கலக்கி மாதிரி ஐஞ்சாறு சத்தம் கேட்டது..." எனும் மரியம் ஆச்சியின் கண்டு பிடிப்பான புதிய குண்டு வீச்சு பற்றிக் கூறுகிறார் ஆசிரியர். இறுதியில் 'அந்திமம்' எம்மை ஒரு உலுக்கு உலுக்கிவிடுகிறது. "சவம் சவமாகவே கிடந்தது. இனித் தன்னை யாருமே சீண்டப் போவதில்லை என்ற விரக்தியுடன்" எனத் தெரிவித்து எமது வரலாற்றுப் பதிவாகிறது என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இவ்வாறாகத் தம் மண்வாசனை வீசும் தமிழால் அப்பாச்சி, ஆதிக்கம், அதிர்வுகள், ஆக்கிரமிப்பு, அவஸ்தை, தருணம், தீர்வு தேடும் நியாயங்கள், வேளை வந்த வேளை, காலச் சிதறல்கள், தனிக் குடித்தனம், மண்ணும் மனையும், அந்திமம்... தொடர் 12ம் பக்.... →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியம் என்பது மனித விழுமியங்களை வலியுறுத்தும் பொக்கிஷம்




ஈடுஇணை இல்லா இலக்கியங்களில் பெண்கள் பல்வேறு கோணங்களில் சித்திரிக்கப்படுகிறார்கள். மென்மையின் இலக்கணமான பெண்கள் இலக்கியங்களில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளது ஈண்டு கவனிக்கத் தக்கதே. இவ்வாறான இலக்கியங்கள் காலத்தாற் கரையாது, அழியாப் புகழ் பெற்று மணம் வீசுவதை நாம் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இவ்வழியா இலக்கியங்களாலேயே தமிழ் செம்மொழி அந்தஸ்திற்கு உயர்ந்தது எனலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி பிறந்த ஊர் சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினம், கண்ணகியின் தந்தை மாநாய்கன். கோவலனும் அதே ஊரைச் சேர்ந்தவரே. அவரது தந்தை மாசாத்துவன். அக்காலத்தில் இவர்கள் தலை சிறந்த வணிகர்களாகவும், செல்வம் கொழிக்கும் பிரமுகர்களாகவும், பேரோடும் புகழோடும் கொடி கட்டிப் பறந்ததால், மக்களின் திருமணத்தை ஊரேகேள், நாடே கேள் என்று மிகச் சிறப்பாக நடத்தி முடித்தார்கள். கோவலனும் கண்ணகியின்பால் தீராக் காதல் கொண்டிருந்ததாக இளங்கோவடிகளார் கூறுகிறார். இனிதாக வாழ்ந்த சில ஆண்டுகளில், கோவலனது தீராக் காதல் தடம் புரண்டது. மாதவியின் உறவால் கண்ணகியின் வாழ்வில் கவலை புகுந்தது. இளங்கோ அடிகளார் கோவலன் மாதவி மீது காதல் கொண்டான் என்று உரைக்காது, கோவலனுக்கு மாதவி மீது "விடுதல் அறியா விருப்பாயிற்று" என்றே குறிப்பிடுகின்றார். கண்ணகியுடன் சில ஆண்டுகளும் மாதவியுடன் பல ஆண்டுகளும், கோவலன் வாழுகின்றான். இங்கு கண்ணகியின் சிறப்பியல்புகளைச் சீர்தூக்கிப் பார்ப்போமேயானால், கோவலன் தன்னைவிட்டுப் பிரிந்து மாதவியோடு வாழ்ந்தபோது, கணவரின் குற்றத்தை இடித்துரைக்கவுமில்லை, கடிந்துரைக்கவுமில்லை. கணவன் தனக்கு தீங்கிழைத்ததாக நினைக்கவுமில்லை. பிறரிடம் கணவரைப்பற்றி புறங்கூறித் திரியவுமில்லை. கோவலனால் தான் பெறும் இன்பத்தை இழந்துவிட்டதாகக் கருதவுமில்லை. மாறாக, இல்லறக் கடமைகளைச் செய்யும் வாய்ப்பை இழந்து விட்டதாகவே எண்ணுகிறாள். இது பெண்மையின் தன்னலமற்ற தூய்மையையே காட்டுகிறது. மாதவியின் உறவால் சொத்துக்களைத் தொலைத்துவிட்ட கோவலன் கண்ணகியிடம் தான் தொலைத்த பொருட்களைப் பற்றியும்,

கலாபூஷணம் வித்தகர் வயலற் சரோஜா -

இலக்கியச்சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது வறுமையில் நாணுவதைப் பற்றியும் கூறும்போதுகூட, பொருட்களை அழித்தது பற்றி ஒன்றுமே பேசவில்லை. மாறாக, கணவனது கவலை போக்கக் கருதி "சிலம்புகள் உள்ளன கொள்ளுங்கள்" என்று கூறி மலர்ந்த முகமாய் நிற்கின்றாள். கண்ணகியின் மனமும் மென்மை மிக்கதே. பிறர் உள்ளக் குறிப்பை விரைந்து உணர்வதும், பொறுமைக் காப்பதும் அவளது பண்பாகும்.

தனது கணவனைத் தன்னிடமிருந்து பிரித்த மாதவியைப் பழிக்காமலும், தூற்றாமலும் அவள் பால் வெறுப்புக்கொள்ளாமலும் இருந்தமை கண்ணகியின் பெருந்தன்மையைப் பறை சாற்று கிறது.

கண்ணகி மதுரை நகரில் கோவலன் கள்வன் எனப் பழிசுமத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதை, அறிந்த பின்பு ஆறாச் சீற்றங் கொண்டு, மன்னன் முன் வீராவேசத்துடன் நீதி கேட்டாள். பாண்டிய மன்னனும் தான் இழைத்த தவறை உணர்ந்து, உயிர் நீத்தார். கோப்பெருந் தேவியும் உயிர்நீத்தார். கண்ணகியின் சீற்றம்ம் தாளவில்லை, மதுரை நகர் தீக்கிரையாகிற்று, கற்பின் பெருமையை இது எடுத்துக் காட்டுகிறது. "கற்பிற்கணிகலன் கண்ணகி" என்றார் இளங்கோ வடிகளார்.

நளவெண்பாவைச் சீர்தூக்கி நோக்கினால், நளமகராஜா நாடிழந்து, அரசிழந்து, நாட்டைவிட்டு வெளியேறும் போது, தமயந்தியும் பின்தொடர்ந் தார். நளமகாராஜாமீது எவ்வித வெறுப்போ, சலிப்போ கொள்ளவில்லை. ஆனாலும், நளமகா ராஜா நள்ளிரவில் நடுக்காட்டில் தமயந்தியைத் தவிக்கவிட்டு விட்டுச் செல்கிறார். ஆனாலும் தமயந்திக்கு நளன்மீதிருந்த அன்பு சிறிதளவும் குறையவே இல்லை. மறுநாள் மலைப்பாம்பிடம் சிக்கித் தவிக்கும்போது, வேடன் ஒருவன் அவ ளைக் காப்பாற்றுகிறான். அவளது அழகில் மயங் கிய வேடன் அவளைத் தீய நோக்கோடு நோக்கிய போது, அவளது கற்பின் வலிமை வெளிப்பட்டு அவனைச் சாம்பலாக்கிற்று. நளன் வருவானென்று காத்திருந்து, காத்திருந்து காலங் கரைந்தது. மீண் டும் ஒரு சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்து, நளமகா ராசாவை மீண்டும் வரவழைத்து, இனிய இல்லறத் தில் இணைந்துகொள்கிறாள்.

இராமாயணத்தில் சீதைகூட "மனங் கொண்டதே மாளிகை" என்று கூறி கணவனைப் பின் தொடர்ந்து அனேக இன்னல்களுக்காளா கிறாள். சீதைகூடத் தான் கற்புநெறி பிறழாதவள்




**நலம் சேர்க்கும்**

அன்னை மரியாளின் துய்ய பாதம்
அனுதினமும் தொழத்துயரம் தீரும்
என்னதுயர் சூழ்ந்தாலும்
இதயமது கலங்காமல்
அன்புவழி நாட நலம் சேரும்.

என்பதை நிரூபிப்பதற்காகத் தீக்குளிக்கின்றாள். தீ அவளைச் சுடவுமில்லை. சாம்பலாக்கவுமில்லை. மீண்டும் ஒருநாள் மாறுவேடத்தில் மக்கள் நிலை அறிய மன்னன் செல்கிறார். ஒரு குடியானவன் கூறிய வார்த்தைகள், இராமரின் இதயத்தை இரண மாக்கியது. அக்குடியானவனோ, தன் நண்பனிடம் "இன்னொருவனுடன் ஓடிப்போன என் மனைவியை மீண்டும் என் வீட்டிற்குக் கூட்டிவந்து அவளுடன் குடும்பம் நடத்த நான் ஒன்றும் இராமரில்லை" என்றான். இராவணன் கவர்ந்து சென்றவளை மீண்டும் கொண்டுவந்து குடும்பம் நடத்துகிறார் இராமர் என்பதைச் சொல்லாமற் சொன்னான். இராமர் சிந்தித்தார். மறுகணமே சீதையை மீண்டும் காட்டிற்கு அனுப்பி விட்டுப் பிரிவுத்துயரால் தனிமையில் வாடினார். இங்கும் சீதாபிராட்டி கானகத்தில் அலைந்து திரிந்து ஆச்சிரமத்தை அடைந்தார். கற்பினி ஆன அவள் அங்கே லவன், குசன் என்ற குமாரர்களைப் பெற்றுப் பொறுமை யுடன் மனமடக்கி வாழ்வதைக் காண்கிறோம்.

- தொடரும் ....

→ – 10ம் பக். தொடர் ...

... எனப் பன்னிரு சிறுகதைகளையும் தொகுத்துப் பதிவு செய்துள்ள திரு. V. கணமகேஸ்வரனை நிச்சயம் பாராட்ட வேண் டும். அவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம். அத்துடன் இவரைப் போன்ற எம் மண்ணின் எழுத்தாளரது ஆக்கங்களை வெளியிட்டு வரும் "ஜீவ நதி" வெளியீட்டாளருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- மற்றில்டா இராஜேந்திரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை என்ற பெயரில் எங்கிருந்தோ ஒரு கோவேறு கழுதையைக் கொண்டுவந்து அதன்மீது வலம்வரும் பார்த்திபனைச் சிலர் கேலியாகவும் பலர் ஆச்சரியத்தோடும் பார்த்தபோது, தான் என்னவோ மன்னர் பரம்பரையில் வந்துதித்த இராஜகுமாரனெனத் தன்னைக் கற்பிதம் செய்துகொண்டு நெஞ்சை நிமிர்த்தி உட்கார்ந்தான்.

ஆனால், அதைவிட ஆச்சரியம், அயல்வீட்டு உறவினர்களுடன் நீண்ட காலமாகப் பகையுணர்வுடன் வாழ்ந்த குடும்பத்தின் ஓர் அங்கத்தவனான அவன், இப்போது இயல்பான நட்புறவுடன் அவர்களோடு பழகுவதைப் பார்த்தபோதுதான் ஏற்பட்டது.

ஏனோ அதன் உள்ளார்ந்த அர்த்தம் மட்டும் அவர்களுக்குப் புரிவதாயில்லை.

□ □ □

ஆஜானுபாகுவான ஒரு மனிதனின் அளவிற்கு வளர்ந்த அந்தச் சாதுவான மிருகம் மெதுவாக நடை பயின்றுதான் நகர்ந்தது.

பழுப்பேறிய செந்நிறம் கொண்ட அதில் அவன் ராஜபவனி வர, காலாட்படை போலும் சிறுவர் பட்டாளமொன்று பின் தொடர ஒரே அமர்க்களம்தான்.

மாணிக்கவளைக் குளத்தருகே வலம் வரும்போது, அங்கே குளிக்கின்ற இளம் பெண்கள் நாணத்தால் தலை கவிழ்ந்து கழுத்தளவில் தம்மை மறைத்து, மேலெழுந்து தலைகாட்டும் மீன்களெனப் பார்வையால் அவனைத் துளைத்தெடுத்துப் பரவசம் கொண்டதும் என்னவோ உண்மைதான்.

பார்த்திபன் ஒன்றும் பெரிய அழகனென்று சொல்வதற்கில்லை. ஆனால், கம்பீரமான அவன் தோற்றம் அவர்களை ஆட்கொண்டு விட்டதில் வியப்பில்லை.

அவன்மீது ஏற்கனவே மையல் கொண்டிருந்த யுவதிகளின் அதிகரிப்பு இந்தச் சில நாட்களில் ஏறுமுகமாய் இருந்ததை அவனும் அவதானிக்கவே செய்தான்.

இந்தச் சில நாள்களுக்குள்தான் இரத்த உறவினர்களான அயல் வீட்டுக் குடும்பத்தாரோடு நெடுங்காலமாகவே விரோதம் பாராட்டிவந்த தனது குடும்பத்தினரின் தீராத பகைமையை முடிவுக்குக் கொண்டுவந்தாலென்ன என்ற ஞாயோதயம் அவன் அபார மூளைக்குள் பிரவாகித்தது.

இப்போது அவன் இராஜகுமாரன் அல்லவா!

தனது அண்ணன் தம்பியரோடு மந்திராலோசனை செய்ததில் ஓரளவு வெற்றியும் கண்டதான பூரிப்பு அவனுக்குள் துளிர்த்தது.

'ஓம்' என்றும் சொல்லாமல், 'இல்லை' என்றும் சொல்லாமலிருந்த அவர்களது மௌனத்தைத் தனக்குச் சாதகமென நினைத்துக் கொண்டான்.

அவர்களுடைய சின்னஞ் சிறுசுகளுக்கும் அதன்மீது ஏறிப் பார்க்க ஆசை யில்லாமலா



# மாறுபடும் மனிதம்

குறுங்கதை – 32

– வீக்கேயெம் –

தொடர் 16ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் அன்றாடம் உண்ணும் காய்கறிகளில் அளப்பரிய சத்துக்கள் நிறைந்துள்ளன. கிராமப் புறங்களில் வீட்டுத் தோட்டங்களில் விளைவிக்கப் படும் நாடங்காய் உடலுக்குச் சத்துத் தருவதோடு மருத்துவகுணமும் நிறைந்துள்ளது.

வெள்ளை நிறப் பூக்களையும், பெரிய குடுவை போன்ற காயையும் கொண்டிருக்கும் நாடங்காயைப் பல இடங்களில் வீடுகளின் கூரை மேல் படரவிட்டிருப்பார்கள். இந்தியச் சமையலில் பொதுவாக இடம் பெறும் நாடங்காயின் தாயகம், ஆபிரிக்கா என்று கூறப்படுகிறது. ஆதிமனிதன் பயிர் செய்த காய்கறிகளுள் இதுவும் ஒன்று. இது இப்போது எல்லா நாடுகளிலும் பயிர் செய்யப்படுகிறது.

நாடங்காயில் ஓர் இனம் போத்தல் வடிவில் இருப்பதால்தான் இதை ஆங்கிலத்தில் பொட்டில் கார்ட் (Bottle Gourd) என்று வழங்குகின்றனர். (நாடங்காயின் தாவர விஞ்ஞானப் பெயர், லாஜனே ரியா வல்காரிஸ் என்பதாகும்). முற்றின காய்ந்த நாடங்காய் ஓட்டை இசைக்கருவியாகவும், மீன் பிடிக்கும் கருவியாகவும், நீச்சல் கற்கப் பயன்படும் கருவியாகவும் பயன்படுத்துகின்றனர். நாடங்காய் குடுவைகளைப் பாத்திரமாகவும் சிலர் பயன்படுத்து கின்றனர். இதன் இலை, கொடி, காய், விதை அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை.

**செயல்திறன்மிக்க வேதிப்பொருட்கள் :**

நாடங்காயில் சுண்ணாம்புச் சத்து, பொஸ் பரஸ்,இரும்புச் சத்து, விட்டமின் பி போன்றவை சிறிதளவு உள்ளன. மேலும் இதில் 96.1% ஈரப்பதமும், 0.2% புரதமும், 0.1% கொழுப்பும், 0.5% தாது உப்புகளும், 0.6% நார்ச் சத்தும், 2.5% கார்போஹைட்ரேடும் காணப்படுகின்றன.

**உடல்சூடு தணியும் :**

இந்தியா, இலங்கை போன்ற வெப்பமண் டல நாடுகளில் உடல் சூடு இயல்பாகவே அதிகமாகக் காணப்படும். இதனால்தான் நம் முன்னோர்கள் உடல் சூட்டைத் தணிக்க நாடங்காயை உணவில் அதிகம் சேர்த்து வந்துள்ளனர். இதனை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்துவந்தால் உடல் சூடு குறையும், வெப்ப நோய்கள் தாக்காமல் காக்கும். உடல் சூட்டைத் தணித்து உடலுக்குக் குளிர்ச்சியை யும், மினுமினுப்பையும் கொடுக்கும் நாடங்காயைக் கோடைக் காலத்தில் அதிகமாகச் சாப்பிட்டால் பிரச்சினையை எளிதில் சமாளிக்கலாம்.

**உடலுக்குப் புத்துணர்ச்சி :**

சமைத்த நாடங்காய் சிறுநீரை நன்கு பிரிக்கும். உடலுக்குப் புத்துணர்ச்சி தந்து உடல் உறுதியைப் புதுப்பிக்க இக்காய் பயன்படுகிறது. சில சமயங்களில் சிறுநீர் வெளியேறாமல் மீண்டும் இரத்தத்தால் உறிஞ்சப்பட்டு உடலுக்குப் பலவகை யான இன்னல்களை ஏற்படுத்தும். இந்த நிலையைப் போக்கி சிறுநீர் நன்கு வெளியேற நாடங்காய் உதவு கிறது. எனவே, சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள் பழுத்த நாடங்காயை இரசமாக்கி, அதனுடன் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை இரசத்தையும் சேர்த்து அருந்தினால், படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும்.

**நாவறட்சி நீங்கும் :**

நாடங்காயில் நீர்ச்சத்து அதிகம் உள்ளதால் இது தாகத்தைக் கட்டுப்படுத்தும். கொழுப்புச்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள உணவு வகைகளையும், வறுத்த உணவு வகைகளையும் சாப்பிட்டவர்களுக்கு அதிகமாய்த் தண்ணீர்த் தாகம் எடுக்கும். வயிற்றுப்போக்கு மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கும் இதேபோன்று பிரச்சினை உண்டு. இவர்கள் அனைவருக்கும் ஏற்படும் நாக்கு வறட்சியை நாடங்காய் நீக்கிவிடுகிறது.

கோடை காலத்திலும், நாக்கு வறட்சி ஏற்படும் போதும் பச்சையான நாடங்காய் இரசம் சாப்பிட விரும்பினால் ஒரு கப் இரசத்தில் ஒரு சிட்டிகை உப்பு போட்டு அருந்தினால் அதிக தாகம் தடுக்கப்படும். உப்பு போடாமல் இந்த இரசத்தை அருந்தக்கூடாது.

**பித்தத்தைக் குறைக்க :**

உணவு மாறுபாட்டாலும், மன அழுத்தத்தாலும் உடலினை இயக்குகின்ற வாத, பித்த, கபத்தில் பித்தத்தின் நிலை அதிகரிக்கும்போது உடல் பலவீனமடைந்து பல நோய்களின் தாக்குதலுக்கு ஆளாக நேரிடும். இந்த பித்தத்தைக் குறைக்க நாடங்காய் சிறந்தது. நாடங்காயை மதிய உணவுடன் சேர்த்து அருந்தி வந்தால் பித்தம் சமநிலைப்படும்.

நாடங்காய் நரம்புகளுக்குப் புத்துணர்வைக் கொடுத்து உடலை வலுப்படுத்தும். இது இரத்தத்தைச் சுத்தப்படுத்திப் பெண்களுக்கு உண்டாகும் சோகையைப் போக்கும். குடல் புண்ணை ஆற்றும். மூலநோய் உள்ளவர்களுக்கு ஒரு சிறந்த மருந்து. மலச்சிக்கலையும் போக்கும்.

**கண்நோய்கள் நீங்கும் :**

ஒரு துண்டு நாடங்காய், விதை நீக்கிய ஒரு நெல்லிக்காய் இவற்றை நீர்விட்டு அரைத்து சாறு பிழிந்து வாரம் இருமுறை காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் இரத்த அழுத்தம் கட்டுப்படும். நாடங்காயின் சதையை சிதைத்து உடலில் தேய்த்துச் சிறிது நேரம் கழித்துக் குளித்து வந்தால் உடல் எரிச்சல் குறையும். நாடங்காயைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் கண்நோய் நீங்கும்.

இதன் இலைகளை நீரிலிட்டு ஊற வைத்து அந்த நீரைப் பருகி வந்தால் வீக்கம், பெரு வயிறு, நீர்க்கட்டு நீங்கும். காமாலை நோய்க்கும் கொடுக்கலாம்.

**தூக்கம் வரவழைக்கும் :**

தூக்கமில்லாமல் அவதிப்படுகிறவர்கள் நல்லெண்ணெயுடன் நாடங்காய்ச் சாற்றையும் சேர்த்து இரவில் படுக்கப் போகும்போது தலைமுடிகளில்



நாடங்காயில் ஓர் இனம் போத்தல் வடிவில் இருப்பதால்தான் இதை ஆங்கிலத்தில் பொட்டில்கார்டு (Bottle Gourd) என்று வழங்குகின்றனர்.

விட்டு மசாஜ் செய்வது போல் தலையைப் பிடித்து விட வேண்டும். முடிக்கற்றைகள், தலைப் பகுதி முதலியவற்றில் சேரும் இந்த எண்ணெய் உடனே தூக்கத்தை வரவழைத்துவிடும். நாடங்காயின் இலைகளைச் சமைத்து உண்டாலும் தூக்க மின்மை நீங்கும்.

**யார் சாப்பிடக்கூடாது :**

நாடங்காயை எவரும் பச்சையாக உண்ணக் கூடாது. ஏனெனில், வயிறும், குடற் பகுதியும் பாதிக்கப்படும். நாடங்காயை விடப் பிஞ்சும், பழமும் உடலுக்கு நல்லவை. இவை இரண்டையும் நன்கு பயன்படுத்தலாம்.

வாத நோயாளிகள், காய்ச்சலில் உள்ளவர்கள், தொந்தி வயிறு உள்ளவர்கள் (தொந்தியை அதிகப்படுத்தும் காய் இது) பாடகர்கள் முதலானோர் நாடங்காயைப் பயன்படுத்தக் கூடாது. எப்போதாவது ஒருமுறை சாப்பிடலாம். பெண்கள் மாதவிடாய் நாட்களில் கண்டிப்பாக நாடங்காயைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. ●

## – புனிதர்களை அறிவோம்

மனம் மாறாதவரைச் சிறையிலடைத்தனர். அங்கு அவருக்குக் காவல் இருந்த 3 வீரர்களையும் கிறிஸ்துவை ஏற்கவைத்தார். மக்சிமியான் மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுத்து உரோமைத் தெய்வம் ஜுபிடருக்குத் தூபம் காட்டப் பணித்தான். விக்டரோ அதை உதைத்துக் கீழே தள்ளினார். கோபம் கொண்ட மக்கள் கூட்டம் விக்டரை வெட்ட வந்தபோது பேரரசன் முதலில் காலை வெட்டும்படிச் செய்தான். பின் தானியம் அரைக்கும் திரிகைக்குள் போடுமாறு கட்டளையிட்டான். ஆனால், இயந்திரம் சுக்குநூறாகியது. இறுதியில் விக்டரையும் அந்த 3 வீரர்களையும் கொன்று கடலில் வீசினார்கள். இவ்வாறு 290ம் வருடம் விக்டர் கொலை செய்யப்பட்டார். விசுவாசிகள் இவர்களது உடல்களை எடுத்து அடக்கம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: 13ம் பக். தொடர் ...
போகுமென்று எண்ணியவனாக நட்புறவு பாராட்டத் தொடங்கியதில் வெற்றியும் கிடைத்தது.

பெரியவர்களுக்கு அதில் நாட்டமோ, விருப்பமோ இல்லாதபோதும், பிள்ளைகளை அவர்கள் தடுக்கவுமில்லை.

இப்படியாக வளர்ந்த நட்புரிமை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அவன் வயதையொத்த இளைஞர்களையும் இணைத்து வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அவனுக்கு.

மெல்ல மெல்லப் பெரியவர்கள் மனதிலும் இடம் பிடித்துக்கொண்டான்.

ஒரு நாளிரவில் அந்தச் செங்காரி எங்கோ போய்த் தொலைந்ததில் அவனுக்கு எல்லாமே 'சீ' என்று போயிற்று. எங்கெல்லாம் தேடியும் அது கிடைத்தபாடில்லை.

ஒருநாளாவது அதன்மீது சவாரி செய்து சாதனை படைக்க வேண்டுமென்ற அவனது நப்பாசையும் தகர்ந்து போனதுதான் வேதனையை அதிகரித்தது.

மனமுடைந்தவனாய், புதிதாக முகிழ்த்த உறவுகளுடன் தன் வேதனையைப் பகிர்ந்து கொண்டான். அவர்களை விட்டால் வேறு யாருமில்லை என்ற நிர்க்கதிக்குள்ளானான். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் புதிதான ஒரு பிரச்சினைக்கும் முகம் கொடுக்கநேர்ந்தது.

அவர்கள் தமது நீரிறைக்கும் "பம்ப்" ஒன்றை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றி வர்ணம் தீட்டிப் புதுமெருகேற்ற முனைந்தபோது அவனும் ஒத்தாசையாக நின்றான்.

அவர்களுடனான இவனது உறவை முறிக்க அண்ணன் திட்டம் தீட்டியபோதுதான், சாம்பரினுள்ளே கனன்றுகொண்டிருக்கும் நெருப்பை மீளவும் வெளிக்கொணரக் கங்கணம் கட்டிய சாணக்கியமே மௌனத்தின் உள்ளார்ந்த நோக்கமென உணர்ந்துகொண்டான்.

இப்போது அவன் மன்னனல்லவே; சாதாரண ஒரு பிரஜை.

அதனால், பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டும் கைங்கரியத்தில் ஈடுபடுவதைத் தவிர அவனுக்கு வேறுவழி தெரியவில்லை.

வர்ணம் தீட்டப்பட்ட உதிரிப்பாகங்கள் அனைத்தும் அவனது குதிரையைப் போலவே ஒரே இரவில் காணாமல் போயின.

இவனைச் சந்தேகிப்பதா, இவன் அண்ணனைச் சந்தேகிப்பதா என்ற குழப்பத்தில் அவர்கள் இருந்தபோது, அவனும் தன் பங்கிற்கு அனுதாபங்காட்டினான்.

இவன் மீதிருந்த சந்தேகம் போய், தீராத பகைக்குக் காரணமான அண்ணனே பழி தீர்த்துக் கொண்டானென அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அதனை நிரூபிப்பதுபோல் மறுநாள் இவர்களுக்குஒரு தபாலட்டை வந்தது.

குறிப்பிட்ட பாகமொன்று வயலில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றுக்குள் இருப்பதாக. இவர்களோடு அவனும் சேர்ந்து தேடியெடுத்த போது, இதுவே அண்ணனின் பழிவாங்கு படலத்தின் ஆரம்பமென்று இவர்கள் அறிவில் உறுத்தியது. நிச்சயம் முழுவதும் கிடைக்குமென்ற நம்பிக்கையும் இவர்களுக்கிருக்கவில்லை.

இன்னும் எங்கெங்கு தேடவேண்டுமோ என்ற மனக்கிலேசத்தில் இவர்கள் உறைந்திருந்தபோது, மறுநாள் மறுபடியும் ஒரு தபாலட்டை வந்துசேர்ந்தது.

அந்தக் குளத்திலென்றும், அடர்ந்த காட்டுக்குள் என்றும், சேறு அள்ளிச் சுத்தம் செய்யாத மாணிக்கவளையிலென்றும், காரை முட்கள் செறிவாகப் படர்ந்திருக்கும் பற்றைக்குள் என்றும் தினசரி ஒவ்வொரு தபாலட்டை வந்துகொண்டேயிருந்தது.

இவர்களும் சலிக்காது துளாவிக்கொண்டிருந்தனர். அனைத்தும் கிடைத்ததான மனத்திருப்தி இவர்களுக்கு! தேடியெடு படலம் முடிவுற்றதும், மீண்டும் முருங்கை மரத்திலேறிய வேதாளமாக நட்பு முறிந்து பகையே விஸ்வரூபமெடுத்து வளரத்தொடங்கியது.

இவனும் என்ன செய்வான்?

இவன்கூட அவனுக்கு உளவாளியான சூத்திரதாரியாய் இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் தோன்றியதும், நிரந்தரமாகவே இவர்கள் மனங்களும் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேடையும் நாடகங்களும்

# இதுதான் அரசியல்

– பாமுர்வேந்தன் –

ஜெனிவாவில் கால அவகாசம் வழங்கும் நாடகம் முடிந்து விட்டது. அதில் பங்கு பற்றிய நாடகக் கலைஞர்களில் நம் தமிழரசுக் கட்சியும் ஒன்றாகிவிட்டது. இப்போது இலங்கையில் அதன் தொடர் நாடகங்கள் மேடையேறி வருகின்றன. ஆளும் தரப்பின் ஜனாதிபதி முதற்கொண்டு ஒவ்வொரு அமைச்சர்களும் கதை வசனம் எழுதி மேடை ஏற்றி வருகின்றனர், கூட்டு எதிரணியினரும் நாங்களும் சளைத்தவர்களல்ல என்பதுபோல் ஆவேச வசன நடையுடன் தமது நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர். நம்முடைய தரப்பார் அடுத்த ஜெனிவா மகாநாடு வரையிலும் ஓய்வு எடுப்பார்கள் என்பது நிச்சயம். அது நெருங்கி விட்டதும் அவர்களும் ஆளுக்காள் வீரவசனம் பேசி நடிப்பார்கள், சிலர் விட்டுக் கொடுத்தும் நடிப்பார்கள். மக்கள்தான் பாவம்! தனியாகப் போராட வேண்டிய துர்ப்பாக்கியத்துக்கு ஆளாகிவிட்டார்கள்.

உறவுகளுக்காகப் போராட்டம், நிலத்துக்காகப் போராட்டம், நீருக்காகப் போராட்டம், வாழ்வுரிமைக்காகப் போராட்டம், வேலைக்காகப் போராட்டம், கல்விக்காகப் போராட்டம், கொள்கைக்காகப் போராட்டம், வெளியில் வரப் போராட்டம், உள்ளே போகப் போராட்டம், ஆளுங்கட்சிப் போராட்டம், எதிரணியின் போராட்டம் என்று போராட்டங்கள் இல்லாத நாளே இல்லாத நாடாக நம் நாடு மாறிவிட்டது. தேரோட்டங்கள் நடக்கிறதோ இல்லயோ போராட்டங்கள் தொடரவே செய்கின்றன. எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான். நாட்டு நடப்புக்களை வளைத்துப் போட்டுக் கொண்ட போதைப்பொருள், கத்திவெட்டு. பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை மற்றும் விபத்துக்களால் மக்கள் வாயிழந்து போகிறார்கள். எல்லோர் வாயிலும் இப்போது அவன்கள் மட்டும் இருந்திருந்திருந்தால், என்ற பல்லவியே ஒலிக்கிறது.

இது இப்படி இருக்க சண்டியர் ட்ரம்பிற்கு அவல் எடுத்து வாயில் போட்டுக் கொடுத்திருக்கிறார் சிரிய ஜனாதிபதி ஆசாத். மக்கள் மீது இரசாயனப் பொருட்கள் கொண்டு தாக்கினார் என்று இவர் ஏவுகணைத் தாக்குதலைத் தொடங்கியிருக்கிறார். இது வட கொரியாவுக்கும், சீனாவுக்கும் ஏன் அவரது நண்பன் ரஷ்யாவுக்கும் ஒரு எச்சரிக்கை மணியாக இருக்கும் என்பது அவரது கணிப்போ தெரியவில்லை. ஏதோ கச்சை கட்டிக் கொண்டார். அவிழ்ந்து விடாமல் பார்த்துக் கொண்டால் சரிதான்.

இது தவிரவும் பல மேலை நாடுகள் இலங்கையுடன் எலியும், பூனையும் விளையாட்டில் மிகத் தெளிவாகவே இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக எத்தனையோ இராஜதந்திரப் பிரதிநிதிகள் பல மட்டங்களிலிருந்தும் வந்தார்கள், யாழ்ப்பாணம் வரையிலும் போனார்கள். மக்கள் பிரச்சினைகளையெல்லாம் அவதானத்துடனும், அனுதாபத்துடனும் கேட்டகவே செய்தார்கள். ஆனால், தீர்வுக்கான பயணத்தில் இலங்கை அரசை நெருக்குவதில் எல்லோரும் அஜாக்கிரதையாகவே இருக்கிறார்கள் என்பது வேதனையான உண்மை! துன்பப்படும் மக்களின் நியாயத்தை ஏற்கிறார்கள், ஆனால், அவர்களுக்கான தீர்வை மட்டும் இன்னும் இரண்டு வருடத்திற்கு ஒத்திவைத்து உதவுகிறார்கள் என்றால் இதென்ன நாடகம் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இவை எல்லாவற்றிற்கும் மத்தியில் அரசியலோடு சம்பந்தப்படாத ஒரு நாடகம் இறைவனால் மேடையேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. மெக்சிக்கோ, அமெரிக்கா, தென் அமெரிக்க நாடுகள், ஐரோப்பா. இங்கிலாந்து, சீனா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா என்று பல நாடுகளிலும் பூமி பிளந்தோ பிளக்காமலோ அனைத்தையும் உள்வாங்கிக் கொள்ளும் சம்பவங்கள் நடக்கின்றன. அவை

– தொடர் 23ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல காலம் பொறக்குது!

- கலைக்கோட்டன் அ. இருதயநாதன் -

நல்ல காலம் பொறக்குது!
நல்ல காலம் பொறக்குது!
அம்மோவ் தாயி நானு!
அடலயில இருந்து வாறனம்மா.

இந்தா வந்திருக்சே!
எனக்கு தெரிஞ்சிருக்சே
அம்மாட மனசில கவல வந்திருச்சி

அம்மா போ!
நல்ல காலமும் கெட்ட காலமும்!
எங்களுக்கு எப்பதான்
நல்ல காலம்
அதுவும் தமிழருக்கு

ஏன் தாயி இப்புடி சொல்றா
இப்பதானே நல்லாட்சி எண்டாங்க!

என்ன
இன்னொருக்கா சொல்லு பாப்பம்!
சொன்னியெண்டா
உனக்கு இண்டைக்குத்தான்
கெட்டகாலம்!

படிக்காத புள்ள ஊட்டில
குடிகாறப் புருசன் ஊட்டில
சொல்கேளாத குமரு ஒண்டு
திண்டுக்க சோத்துக்கு
வழியில்ல

தாயி, செபமாலையே
தொடாத குடும்பமிது
எப்புடி நல்ல காலம் - ஆ
நீ எங்க கிடந்து வந்தா
அடலயில தாயி!
உன்ன! உன்ன!!
வந்த இடத்துக்கே
அனுப்பிருவன்
ஓடிப் போய்த்திரு.



# சின்ன விஷயங்கள்



## அன்பால் பெறும் வெற்றியே வெற்றி :

அந்த முனிவரின் ஆச்சிரமத்திற்குள் அதிகார வெறி பிடித்த அரசன் நுழைந்தான். வாசலிலேயே தவத்தில் இருந்த முனிவரைப் பார்த்து "முனிவரே வணக்கம்" என்றான். முனிவர் கண் திறக்கவில்லை. குரலை உயர்த்திப் பலமுறை வணக்கம் சொன்னான். கண் திறந்த முனிவர், "சத்தம் போடாதே! பறவைகள் பயப்படும்" என்றார். கோபத்தில் அரசன் வாளை உருவ ஆயிரக்கணக்கான பறவைகள் சூழ்ந்து அரசனைக் கொத்தத் தொடங்கின. அவற்றை அமைதிப்படுத்திய முனிவர் "அரசனே! அதிகாரம் செலுத்துவதில் நீ பிரியம் வைத்திருக்கின்றாய். ஆனால், அன்பு காட்டுவதன் அதிகாரத்தை நீ அறியவில்லை. பறவைகள் என் அன்புக்குக் கட்டுப்பட்டன. அன்பால் பெறும் வெற்றியே வெற்றி" என்றார். அன்றே மாறினான் அரசன்.

## கடவுளின் தரிசனம் .....

கால் பந்து மைதானத்தில் இரு நாடுகளுக்கிடையே போட்டி. அரங்கம் நிரம்பி வழிந்தது. இரு அணிகளும் மாற்றி மாற்றிக் கோல் போட்டுக்கொண்டிருந்தன. இருவர் வெற்றிக்கும் ஒருவர் ஆர்ப்பரித்துக் கைதட்டி ஊக்குவித்துக்கொண்டிருந்தார். அவர் எந்த நாட்டை ஆதரிக்கிறார் என்பதில் கூடியிருந்தவர்களுக்குக் குழப்பம். அவரிடமே கேட்டார்கள். அவர் சொன்னார், "நான் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவன். நாடு என்கிற எல்லை எனக்கில்லை. மனித குலம் தன் திறமையை எங்கெல்லாம் வெளிப்படுத்துகிறதோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன். அவர்களைப் பாராட்டுவதன் மூலம் என்னையே பாராட்டிக்கொள்கிறேன்" என்றார். அவர் கடவுள் என்பதை யாரும் அறியவில்லை. மனிதனின் திறன் வெளிப்படுவதே கடவுளின் தரிசனம்.

- ஜே.எச்.இரத்தினராஜா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலையம் நடாத்திய கருத்தரங்கு



சித்திரைத் திங்கள் எட்டாம் நாளன்று சனிக் கிழமை காலை 9 மணியளவில் மட்டக்களப்பு மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய கேட்போர் கூடத்தில் இக்கருத்தரங்கு இறைவணக்கம், குத்துவிளக்கேற்றும் வைபவம் ஆகியவற்றுடன் சமூகத் தொடர்பு நிலைய இயக்குநர் அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்டி அடிகளின் தலைமையில் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மறைமாநிலத்தின் சகல பங்குத் தந்தையர்க்கும் அறிவிக்கப்பட்டு, அவர்களது ஒத்துழைப்புடன் வருகை தந்திருந்த பங்கு மேய்ப்புப் பணிச்சபை அங்கத்தவர்களும், ஏனையோரும் இதில் பங்குபற்றினர். இக்கருத்தரங்கை நடாத்தும் வளவாளராக உளவியல் நிபுணரும், உளவளத்துணை ஆலோசகரும், மட்டக்களப்பு இயேசு சபை மேலாளருமான அருட்தந்தை. போல் சற்குணநாயகம் இயேசு சபை அடிகளார் அழைக்கப்பட்டிருந்தார்.

இயக்குநர் தந்தை தமது வரவேற்புரையில் தமது கோவா புனித நகரப் பயணத்தின்போது ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன், இவ்வருடம் தூய யோசேப் வாசுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளதுடன் குடும்பங்களைப் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்க எமது இலங்கைத் திருச்சபை முயற்சிக்கிறது. இன்றைய நவீன குடும்பங்களில் ஏற்படும் சவால்கள் பாரதூரமான விளைவுகளை உருவாக்கி விடுகின்றன. அவற்றைப் பற்றியும், அச்சவால்களுக்கு எவ்விதம் முகங்கொடுத்து வெற்றி பெறலாம் என்பது பற்றியும் விளக்கம் பெறுவதற்கு அருட்தந்தை. போல் சற்குணநாயகம் இயேசுசபை அடிகளை நாடியபோது மறுக்காது ஏற்று இக்கருத்தரங்கை நடாத்த வருகை தந்தமைக்கு நன்றி தெரிவித்து, அவரை அறிமுகம் செய்து கருத்தரங்கை முன்னெடுக்க அழைத்து விடைபெற்றார்.

இக்கருத்தரங்கு பொதுவான ரீதியிலும் உளவியல் ரீதியிலுமாக "எமது நவீன குடும்பங்களின் சவால்கள்" எனும் தலைப்பில் ஆராயப்பட்டது. ஆலயத்தில் முறைப்படி திருமணம் செய்தவர்களும் கூடக் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளால் கஷ்டப்பட்டு வெளியுதவிகள், ஆதரவைப் பெற்றுக்கொள்கின்றனர். இத்தகைய சவால்களை எவ்வாறு தீர்க்கலாம் என்ற வினா எழுப்பப்பட்டு கருத்துகள் முன்னெடுக்கப்பட்டன. ஆரோக்கியமான குடும்பங்களில் காணும் அம்சங்களையும் ஆரோக்கியமற்ற குடும்பங்களில் காணும் அம்சங்களையும் விளக்கமாக வழங்கினார். தொடர்ந்து திருவிவிலிய அடிப்படையில் பல மேற்கோள்கள் காட்டப்பட்டு ஆன்மீக ரீதியிலான குடும்பங்களின் வாழ்க்கைமுறை எத்தகையதாக இருக்கவேண்டும் எனும் கருத்து முன்வைக்கப்பட்டு, நடைமுறையில் அதாவது தற்கால குடும்பங்களின் நிலை அல்லது போக்கு பற்றியும் விளக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள "அன்பின் ஆனந்தம்" எனும் திருமடலை மையமாக வைத்து உரை தொடரப்பட்டது. கணவன், மனைவியர்க்கு, பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு என்று அதில் காணும் அறிவுரைகளுடன், குடும்பங்கள் இறைவன் வாழும் இல்லங்களாகத் திகழ நாம் செய்யவேண்டியவை மற்றும் குடும்பங்கள் இறைவன் வாழும் இல்லங்களாகத் திகழ நாம் தவிர்க்கவேண்டியவை பற்றியும் திருத்தந்தையின் மடலினூடாக விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஆய்வுக்கு விடப்பட்டனர். மீண்டும் பொது அமர்வில் அவர்களது கருத்துகள் வெளியிடப்பட்டன. அருட்தந்தை இவற்றுக்கான விளக்கங்களைக் கொடுத்தார். அவரது தொகுப்புரையுடனும், மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலைய இயக்குநர் தந்தையின் நன்றியுரையுடனும் மதியம் 12 மணி 25 நிமிடமளவில் மதிய உணவுடன் கருத்தரங்கானது இனிதே நிறைவுற்றது.

**தகவல்: மற்றில்டா இராஜேந்திரம்**
சமூகத் தொடர்பு நிலையம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் எப்போதும் கனிவான பதில்களைத் தருவதில்லை... கசப்பான நினைவுகளையும் நமக்குள் ஊட்டி மறைந்துவிடும். ஆமாம்... காலவோட்டத்தின் தகிப்பில் நானும் காலாவதியாகா மல் தப்பியிருந்தேன். காரணம் .... எனக்கு கிடைத்த அதிபர். அவர்தான் அருணாச்சலம் சேர்! எப்போதும் மறவாமல் வெள்ளை வேட்டியும், வெள்ளை ஜிப்பாவும், கண்ணாடியூடே பிறரை ஊடுருவும் கண்கள் .... ஆஜானுபாகுவான உயரம்..... மஞ்சள் நிற மேனிக்கு மகுடம் வைத் தாற்போல் நெற்றியில் மஞ்சள் நிறப் பொட்டு... பார்த்தாலே கையெடுத்துக் கும்பிடத் தோன்றும் முக பாவம்... அதிபரே எங்களுக்கு தமிழ் ஆசிரியர்.... தமிழ் பாடத்தைக் கற்பிப்பதில் அவர் பாணி அலாதியானது. ஆகு பெயர்களை மனதில் வைத்திருப்பதற்கு, 'பெயரே ஐ, ஆல், கு, இல், அது, கண், விழி' என இயல்பாக்கித் தருவார். மாதங்களில் நாட்களின் எண்ணிக்கையைக் கணித சேர் அவர் பாஷையில் சொல்லித் தந்தாலும் அருணாச்சலம் சேர் தனது பாணியில்,

சீர் பெறு தை வைகாசி
சிறந்த பங்குனியோடாடி
ஆர் பெறும் ஆவணி மார்கழி
ஐப்பசி முப்பத்தொன்றே ....
கார் புரட்டாதி ஆனி கார்த்திகை
சித்திரையும்
பார்திகழ் முப்பதாகும்
மாசியும் இருபத்தெட்டே

மறக்கமுடியாத வகையில் செய்யுளாகவே தந்துவிடுவார். அவர் காலத்தில் தான் நான் ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். அப் பாடசாலையில் நான் மட்டுமே சித்தியடைந்திருந்தேன். இப்போதைய சூழலில் உள்ளதைப்போல் புலமைப் பரிசில் பெறுவதற்கல்லாமல் புகழுக்காகவும், கௌரவத்துக் காகவும் தோற்றும் பரீட்சையாக அல்லாமல் வருமானம் குறைந்த குடும்பப் பிள்ளைகளே தோற்றக்கூடிய பரீட்சையாகவே இருந்தது. அத்தோடு பிள்ளைகளை வருடக்கணக்கில் வறுத்தெடுக்கும் வதைப்படலமாக அல்லாமல் ஒவ்வொரு நாளும் ஒரு பாடத்தை 'பொது உளச்சார்பு' படிக்க ஓர் ஆசிரியரிடம் அனுப்புவார்கள்.... அவ்வளவேதான் '... நான் சித்தியடைந்த பின் தான் எனது அம்மாவுக்குத் தன் மகன் இப்படியொரு பரீட்சை எடுத்தான் என்பதே தெரியும்.

"அதிபர் சேர் வரட்டாம்"
ஒரு மாணவன் தான் வந்து
கூறினான். ஒரு தடவை
நடுநடுங்கிப் போனேன்.
உடல் உதறல்
எடுக்க நடந்து
அதிபரின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையின் முன்னால் ஒடுங்கியபடி ஒதுங்கியிருந்தேன். ... எட்டிப் பார்க்கக்கூட திராணியில்லை.... ஆயிரத்துக்குக் மேற்பட்ட மாணவர்கள் கற்கும் அம்மகாவித்தியாலயத்தில் தனியனாக நான் நின்றிருந்தேன்... அதிபரின் அலுவலகம் முன் நின்றிருந்த என்னை அவ்வழியால் சென்ற சேர்மாரும், டீச்சர்மாரும் ஒருவித நையாண்டிப் புன்னகையுடன் கடந்து சென்றனர்.

அப்போதுதான் அதிபர் என்னைக் கண்டார் போலும்...

"வாரும் .... வாரும்.... வீரரே வாரும்..."

உள்ளே சென்றேன்.

உப அதிபரும், நாலைந்து டீச்சர்மாரும் அங்கே நின்றிருந்தார்கள்.

"இவர்தான் இம்முறை நம் ஸ்கூலில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றார், 192 புள்ளிகள் ... மாவட்டத்தில் மூன்றாவது இதோ பாருங்கள் முடிவு வந்துள்ளது...."

நான் திகைத்துப் போய் நின்றிருந்தேன், அது பயமா .... பரவசமா .... என்பது புரியாத வயது. பக்கத்தில் அழைத்து அணைத்து,

"இதோ எனது பரிசு .... ஒரு புதிய பைலட் பேனா .... மையூற்றி எழுதுவது. வைத்துக்கொள்ளும்.... கெட்டிக்காரன்..." என்றார். ஏனையோரும் முதுகில் தட்டிப் பாராட்டினர்... மறுநாட்காலை ஒன்றுகூடலில் மேடைக்கு என்னை அழைத்துப் பாராட்டியது இன்னும் பசுமையாகவே உள்ளது...

"இவர்தான் ஐந்தாமாண்டு புலமைப் பரிசில் வெற்றியாளர், மாவட்டத்தில் மூன்றாமிடம் அடுத்த மாதம் வந்தாறுமூலை மத்திய கல்லூரியின் விடுதியிலிருந்து படிக்கச் செல்லவுள்ளார்.... எங்கே உங்கள் பாராட்டுக்கள் ...." கரவொலியால் மண்டபம் அதிர்ந்தது. பின் அவரே விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அப்பாவையும் அழைத்துக் கையொப்பம் வாங்கி அனுப்பிவைத்தார். அடுத்த மாதம் விடுதிக்குச் செல்ல அப்பாவுடன் அவரும் வந்து பாடலையில் சேர்த்துவிட்டார்.

காலவோட்டத்தில் காலாவதியாகாமல் கம்பஸ் சென்று படித்துக் கணித ஆசிரியரானேன்.... புதிய பாடசாலை ..... புதிய அதிபர் ..... புதிய சூழல் ... நான் சுதாரித்துக்கொண்டு கற்பித்தேன்...

அப்போதுதான் அவதானித்தேன் ஐந்தாம் வகுப்பில் அதிபர் ஆக்ரோஷத்தோடு நின்றிருந்தார்....

"யாரது காலை வகுப்பிற்கும், பின்னேர வகுப்பிற்கும் வராமல் நின்றவர்கள்...?"

கையில் பெரிய பிரம்புடன் சந்நதமாடிக்கொண்டிருந்தார்.

நான் சற்று புன்னகைத்துக்கொண்டேன்.

இது வழக்கமான அசாட்பூகித்தனம் என்பது எல்லோருக்கும் தெரியும். தான் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவராம். இப்படி வருடத்தில் ஓரிரு தடவைகள் வகுப்பினுள் வந்து பிள்ளைகளோடு எகிறினால் தானே நானும் இருக்கிறேன் என்பதைக் காட்டமுடியும்.

ஆனால், ஐந்தாமாண்டு ஆசிரியர்கள் பாவப்பட்ட சென்மங்கள்தான்.


அதிபரின் கௌரவத்தையும், அம்மாமாரின் கௌரவத்தையும் கீழே விழவிடாமல் அந்த இரு வருடங்களும் காலை, மாலை என்று மேலதிக வகுப்புக்கள் வைத்து அந்தப் பிஞ்சுகளைப் பாடாய்ப் படுத்தித் தாங்களும் மாடாய் உழைத்து பரீட்சைக்குத் தயார் செய்யும் பகீரதப் பிரயத்தனம் இருக்கின்றதே... அகோரம் தான்.

எத்தனை பயிற்சிகள் ... எத்தனை பரீட்சைகள் ....

– தொடர் 23ம் பக்....

**அன்றாட வாழ்வதிலே தொழில் நுட்பமோ**
**இரண்டறக் கலந்திட்ட தன்மையாலே**
**மனிதன் சோம்பேறியாய் மாறியே**
**தேடிக்கொண்டான் கொத்தாக நோயை**






**மத்திய காலத்தில் திருச்சபையில் நிகழ்ந்த விசேட நிகழ்வுகளும், மாற்றங்களும்:**

**8ம், 9ம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவசபை :**

இக்காலகட்டத்திலே பெனடிக்ரின் சபையைச் சேர்ந்த ஆங்கிலேயத் துறவியான புனித பொனிபஸ் ஜெர்மனியில் மறைபோதகப் பணி ஆற்ற அனுப்பப்பட்டார். இவர் ஜேர்மனியிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் கிறிஸ்தவத்தைக் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டனர். திருத்தந்தையருக்கும், பிரான்சிய அரசுக்குமி டையே கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு பிரான்ஸ் நாட்டின் அரசர் உரோமையில் திருத்தந்தையால் முடிசூட்டப்பட்டார். இவ்வாறு முடிசூட்டப்பட்டு அபிஷேகம் செய்யப்படுவது வழக்கமாய் வந்தது.

இதனால் பெரிய சாள்ஸ் அரசர் திருச் சபையையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும், பாதுகாப்பதற்கும், முன்னேறுவதற்கும் முயற்சிகள் பல எடுத்தார். இவ்வேளை திருச்சபையின் ஆட்சியினைத் தன் கையில் எடுத்துக்கொள்ளவும் முயன்றார். திருச்சபைக்காச் செபிப்பது திருத்தந்தையின் பணி எனவும், அதை ஆட்சி செய்வது பேரரசரின் பணி'' எனவும் கடிதமெழுதி திருத்தந்தைக்கு அனுப்பினார். கொள்கை அளவில் இவ்வுலக ஆன்மீக அதிகாரங்கள் திருச்சபைக்கும் அரசுக்குமிடையே இரு பிரிவு களாய் பிரிக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் அவ்வாறிருக்கவில்லை. பேரரசர் பிரசித்தி பெற்றிருந்தவேளை, அவர் தனக்குரிய இவ்வுலக அரசில் அதிகாரத்துடன், திருச்சபை யின் ஆன்மீக விடயங்களிலும் அதிகாரம் செலுத்தினார். திருத்தந்தை பிரசித்தி பெற்றபோது அவர் ஆன்மீக அதிகாரத்துடன், அரசியல் செயற்பாடுகளிலும் அதிகாரம் செலுத்தினார். இதனால், அரசின் மதமே, மக்களின் மதமாய் இருப்பது வழக்கமாயிற்று. இதனால் பெரிய சாள்ஸ் அரசரின் காலத்தில் பலர் திருச்சபையில சேர்ந்தனர். அரசரும் மக்களின் கல்வி நிலையை உயர்த்த அரும்பாடுபட்டார். மறைமாவட்ட ஆயர்கள் ஆலயங்களுக்கருகில் பாடசாலைகளை அமைக்குமாறு பணிக்கப்பட்டனர்.

பின்னர் கொன்ஸ்தாந்தின் அரசர் 3வது லீயோ ஒரு புதிய பேதகத்தை உருவாக்கலாயினார். இவர் அரசை அச்சுறுத்திய முஸ்லிம்களை அடக்க முயலாமல், இறையியல் தலையிட்டு, ஆலயங்களில் கிறிஸ்துவின், புனிதர்களின் சிலைகளை, உருவங்களை, அடையாளங்களை வழிபடுவது தவறு, இது விக்கிரக ஆராதனை எனக்கூறி இவற்றை அப்புறப்படுத்துமாறு, கட்டளையிட்டார். இதனால் அங்கு ஸ்தாபித்து வைத்திருந்த பாடுபட்ட சுருபம் தகர்க்கப்பட்டது. மக்கள் கோபாவேசம் கொண்டு இவர் நியமித்த கவணர்களை விரட்டிவிட்டு திருத்தந்தையிடம் தஞ்சம் புகுந்தனர். திருத்தந்தையே தங்களுக்கு அரசராய் இருக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். 797ல் நிசேயாவில் கூடிய 2வது சங்கம் இப்பேதகத்தினைக் கண்டனம் செய்தது. திருத்தந்தை அரசியலில் ஈடுபட்டதால் திருச்சபையில் பல நன்மைகள் கிடைத்தாலும் பின்னர் அது பல தீமைகளையும் தோற்றுவிக்கலானது.

9ம் நூற்றாண்டில் மிகவும் வலிமை மிக்க திருத்தந்தையாக 1வது நிக்கலஸ் இருந்தார். உரோமைப் பேரரசின் முக்கிய கடமைகள் கத்தோலிக்க திருச்சபையைப் பாதுகாப்பதே தவிர, அதனை ஆட்சிசெய்வதல்ல என அறிவித்தார். பேரரசர் சாளமேயின் கிழக்கு, மத்திய ஐரோப்பாவில்தான், ஏற்படுத்திய பிரதேசங்களில் பிற சமய மக்களை கிறிஸ்தவ மதத்தைத் தழுவும்படி வலியுறுத்தினார். இதனால் பலர் கிறிஸ்தவத்தில் சேர்ந்தனர். பேரரசர்கள் உரோமையில் முடி சூட்டப்படும் வழக்கம் தோன்றியது. கிழக்கிலிருந்து வந்த வைக்கின்ஸர், தென் திசையில் இருந்து வந்த இஸ்லாமியரின் படையெடுப்பினால் மேற்கு பேரரசு வீழ்ச்சியடைந்தது. இதனால் அரசின் →

→

அமைதியும் ஒற்றுமையும் குலைந்தது. கொன்ஸ்தாந்தி நோபிள் பிதாப்பிதாவான போசியுஸ் நிசேயா அறிக்கையில் "பீலியோக் குவே" சேர்கப்பட்டதை ஆட்சேபித்து உத்தரிப்பு ஸ்தலம் பற்றிய போதனையையும் எதிர்த்தான். பிரிவினை தோன்றலானது. இதற்கு திருத்தந்தையின் அதிகாரப் பேரரசும் காரணமானது. இதனால், இந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், இஸ்லாமியர் பேரரசின் கிழக்குப் பகுதியை முற்றுகையிட்டு வீழ்ச்சியுறச் செய்தனர். குருகுலத்தின் மீது இவ்வுலக அதிகாரி கள் ஆட்சி செலுத்தினர். இதன் நிமித்தம் குருமடப் பயிற்சி பெறாதவர்கள், கல்வியறிவற்றவர்கள், விசுவாசமற்றவர்கள், கற்பு நெறி தவறிய வர்கள், குருக்கள் துறவியாகவிருந்தனர். துறவற மடங்கள் பரம் பரை துறவற வாழ்வில் இருந்து விலகி, இலௌகீக சுகபோகத் தில் மூழ்கலானது. பண ஆசை கொண்டோர் அழிவுப் பாதைகளை நோக்கிச் செல்லலாயினர்.

## - இதுதான் அரசியல் ....

... வரவர அதிகரித்துக் கொண்டே போகின்றன. அக்கிரமங்கள் அதிகரிக்கின்றபோது ஆண்டவன் தரும் எச்சரிக்கையாக இந்த நாடகம் அமைகிறதோ தெரியவில்லை. விஞ்ஞான ரீதியாக, கொந்தளிக்கும் சூரியனின் செயற்பாடு மந்தமாகிப்போவதால் ஏற்படும் மின்காந்த அலகின் நேர் எதிர் மறை ஏற்றங்களின் வேறுபாட்டால் பூமி சுற்றுவதில் பாதிப்பு ஏற்பட்டு அது நீள்வட்டமாக அமைவதால் இது ஏற்படுகின்றதென்கி றார்கள். எது எப்படியோ பூமித்தாய் தன்னைச் சுரண்டு கின்ற மனிதனால் சீற்றம் பெற்று எல்லோரையும் கபளீ கரம் செய்ய முனைந்து விட்டாள் போலவே தெரிகிறது. அல் நினோ தாக்கத்தினால் பெய்தால் பெருமழை வெள்ளம், எறித்தால் கடும் வெப்பம் வறட்சி என்று எல்லாம் அந்தம் வரை தொட்டு நிற்கின்றன.

தாங்குமா மனித குலம்? போர்கள் மட்டு மின்றி போராட்டங்களும் அடங்குமா? வெட்டிச் சாய்க்கும் அரசியலைக் கைவிட்டு தட்டிக்கொடுத்து ஆதரவு வழங்கும் இனமாக மனிதம் மாறும் வரை ஆண்டவனின் அரசியல் அரங்கேறிக்கொண்டே யிருக்கும்.

## - அவரும் இவரும் .... தொடர்....

அத்தனையும் மொத்தமாய்ப் பிரயோகித்து
பாசாக்கப்படும் பாடு அவர்களுக்கே வெளிச்சம்...
ஆமாம் ... அந்த ஐந்தாம் வகுப்பு ஸ்கொலசிப்
பரீட்சை முடிவுகள் வந்தன....
கற்பித்த ஆசிரியர்கள் மகிழ்ந்தார்களோ
என்னவோ அதிபர் ஒரு அடி உயர்ந்துதான்
போனார்...
இரு வருடங்களாக உழைத்த ஆசிரியர்களை
ஓரம் கட்டிவிட்டு ஆட்டக் களரியில்
முன்னணியானார்.
சும்மாவா.... சென்றமுறை நான்குபேர் மட்டுமே
'கட் அவுட்' க்கு கூட எடுத்த போதிலும்
இம்முறை பன்னிரண்டு பேர் வந்துவிட்டனர்...
வலயக் கல்விப் பணிப்பாளரும் தம் பங்குக்கு
"என்ன புவிராஜ், சாதித்துவிட்டீர் என்ன...?
அதிபர் கூட்டத்தில் தட்டிக்கொடுத்தார்.
பிறகென்ன.... பெற்றோர் கூட்டம் நாலைந்து
தடவை நடந்தது....
ஏதோ தடல்புடலாகக் காரியங்கள் நிறைவேறின...
சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களே இவ்
வெற்றி விழாவை நடத்தவேண்டும்!
அதிபரின் வேண்டுகோள் இது... வலயக்கல்விப்
பணிப்பாளரே பிரதம அதிதி...
பாண்ட் வாத்தியங்களுடன் வரவேற்பு ....
தலா பத்தாயிரம் வழங்கிய தாய்மார் பெருமிதம்
பொங்க, பட்டுப் புடவைகளும் தங்க நகைகளும்
கலகலக்க வரவேற்றனர்...
மேடையில் அதிபர் வலயக்கல்வி பணிப்பாளரால்
வாயாரப் புகழப்பட்டார்....
விழாவின் முத்தாய்ப்பாய் வெற்றி பெற்றவர்களுக்கு
'மெடல்' போடப்பட்டது.
அதிபருக்கு மாலைகள், மெடல்கள், எல். ஈ. டீ.
ரீவி என்பன பரிசாக வழங்கப்பட்டன...
அதிபரின் மனைவி வாயெல்லாம் பல்லாகப்
பெருமிதத்துடன் வீற்றிருந்தார். இறுதியாக,
கற்பித்த ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு குடையும்,
சாரியும் பரிசாக வழங்கப்பட்டன.
நான் மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.
எனது ஆதர்ஷ அதிபர் அருணாச்சலம் சேர்
எங்கே...?
இது அடங்காத ஆசை கொண்ட அதிபர்
புவிராஜ் எங்கே...?
அவரும், இவரும் அன்று முழுவதும் என்
மனதை அலைக்கழித்தனர்.

- யாவும் கற்பனை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசவ்வாஸ் ஆண்டு

## இலங்கை ஆயர்களின் மேய்ப்புப்பணி மடல் - 2017

தொடர் .....

**தூய யோசப்வாஸ் - உண்மையான நற்கருணையின் மனிதன் :**

கிறிஸ்தவத்தின் ஆரம்பத்திலிருந்தே நற்கருணையைச் சூழவே திருச்சபையானது புதுப் பிறப்பினைப் பெற்றது. (தி.ப. 2:42) திருச்சபையானது தனது அடையாளத்தினை நற்கருணைக் கொண்டாட்டத்தின்போது பெறுவதனையும், இதன்போது விசுவாசிகள் உயிர்த்த ஆண்டவரின் வாழும் பிரசன்னத்தினை அனுபவிப்பதோடு மீட்பர் அவர்களை அவர்களது விசுவாச அர்ப்பணிப்பில் உறுதிப்படுத்துகின்றார். தூய இரண்டாம் யோன் பவுல் தமது பிரசித்தி பெற்ற சுற்றுமடலாகிய "நற்கருணைத் திருச்சபை" எனும் மடலில் திருச்சபைக்கும் நற்கருணைக்கும் இடையேயுள்ள நெருங்கிய உறவு பற்றி விலாவாரியாகப் பேசினார். திருச்சபையானவள் தனது வாழ்வினை நற்கருணையிலிருந்தே பெறுகின்றாள். இது வெறுமனே ஒரு விசுவாச அனுபவம் மட்டுமன்றி, திருச்சபையின் மறைபொருளின் உள்ளீட்டைச் சூழ அமைவதாகவும் காணப்படுகின்றது.

"திருச்சபையானது கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளிலிருந்தே பிறக்கின்றது" என நற்கருணைத் திருச்சபை எனும் மடலின் 1ம் மற்றும் 3ம் எண்கள் குறிப்பிடுகின்றன. அருட்பணி. யோசப்வாஸ் இத்தீவிற்கு வருகை தந்தபோது இங்கு 30 ஆண்டுகளுக்கு மேலாகத் திருப்பலி நிறைவேற்றியிருக்கப்படவில்லை. அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததன் பின்னர் கொண்டாடப்பட்ட முதலாவது கிறிஸ்மஸ் திருப்பலியின்போது, ஒல்லாந்தப் படைகள் நுழைந்து 153 ஆண், பெண் மற்றும் சிறார்களாகக் கத்தோலிக்கர்களைக் கைது செய்தனர். பெண்களும், சிறார்களும் அடுத்த நாளிலேயே விடுதலை செய்யப்பட்டனர். ஆண்கள் இரக்கமின்றித் துன்புறுத்தப்பட்டதோடு பொதுநிலையினர் தலைவரான டொன் பெத்றொ என்பவர் படுகாயமுற்று மறைசாட்சி மரணமடைந்தார். கிறிஸ்தவ வாழ்வில் நற்கருணைக்கு முன்னுரிமை கொடுக்கத் துணியும் இந்த சாட்சிய செயலானது அபிரின் எனும் இடத்தினைச் சேர்ந்த 40 மறைசாட்சிகளை எமக்கு நினைவூட்டுகின்றது. இவர்கள் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு ஒன்று கூடியதற்காக 304ல் மறைசாட்சிகளாக மரணித்தவர்கள்.

"ஞாயிறு நற்கருணைக் கொண்டாட்டமின்றி எம்மால் எமது கிறிஸ்தவ வாழ்வினை வாழ முடியாது" எனக் கூறி இவர்கள் மரித்தார்கள். தூய யோசப்வாஸ் சிதறிப்போன மந்தைகளை, மக்களை ஒன்றுகூட்டித் திருப்பலியினை ஒப்புக்கொடுக்க ஆரம்பித்ததன் பின்னரே இறந்துகொண்டிருந்த விசுவாச நெருப்பு மீளத் தூண்டப்பட்டதோடு, இலங்கைத் திருச்சபையானது மீண்டும் புத்துயிர் பெற்றது. ஒன்பது ஆண்டுகள் தாம் தனியாகவும், பின்னர் சில மக்களோடும் மக்களைச் சந்தித்துத் திருப்பலியினை இலங்கையின் பல பாகங்களில் நிறைவேற்றியமையினூடாகத் திருச்சபையானது புத்தொளியுடனும், பலமுடனும் மீள ஸ்தாபிக்கப்பட்டது. தூய யோசப்வாஸ் நற்கருணை ஆண்டவரை ஆழமாக அன்புசெய்ததோடு, வழக்கமாக இரவு வேளைகளை ஆலயங்களிலும் செலவழித்து வந்தார்.

தமது ஆணித்தரமான போதகப் பணிக்குத் தேவையான ஆற்றலை அவர் நற்கருணை ஆண்டவரிடமிருந்தே பெற்றார். அவர் இத்தீவிற்கு வருகைதந்தபோது அவர் வெறுமனே தம்முடன் கொண்டுவந்த பொருட்கள் ஒரு துணியில் சுற்றிக் கட்டப்பட்ட திருப்பலிப் பாத்திரங்கள்தான். ஒரு சாதாரண கூலியாளைப் போலவே அவர் இலங்கைக்கு வந்தார். தூய யோசப்வாஸ் பொதுநிலைத் தலைவர்களை பூசை தியானங்களை நடத்தக் கற்றுக் கொடுத்ததன் மூலமும், இறைவார்த்தைத் தியானங்களை குருவானவர் இல்லாத நேரம் நடத்துவதன் மூலமாகவும் திருப்பலியிலுள்ள பக்தி வளத்தினை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்தார். தமது மறைபோதக பரந்த தரிசனத்தில் திருச்சபை நற்கருணையை வாழ்வதாகவும், நற்கருணை திருச்சபையைக் கட்டியெழுப்புகிறது எனும் விடயம் பற்றியும் பூரண விழிப்புணர்வுள்ளவராக தூய யோசப்வாஸ் திகழ்ந்தார். தூய யோசப்வாஸ் அவர்களின் நற்கருணை கொண்டாடும் தீவிர ஆர்வம் பற்றி இயேசு சபை குருவானவர் கூறுகையில், அவரது கால்கள் கன்னரகவில் ஒரு திருப்பலி கொண்டாட்டத்தின் போது நிலமட்டத்திலிருந்து உயர்ந்து காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாகக் கூறினார். இவ்வுண்மையானது அன்றைய காலத்து கோவா பேராயரிடம் தெரிவிக்கப்பட்டது. திருப்பலி அவரது வாழ்வின் ஊற்றாகக் காணப்பட்டது. குருக்களின் வாழ்வு மற்றும் பணிக்கான வழிகாட்டி பின்வருமாறு கூறுகின்றது. "விசுவாசிகளின் பிரசன்னத்துடனோ அல்லது இல்லாமலோ குரு நாளாந்தம் திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் பெறுமதியை நினைவிற் கொள்வது அவசியமானது. அதனை அவர் தமது நாளாந்த பணியின் மையமாகவும், கிறிஸ்துவோடோன ஈழமான பயன்தரும் சந்திப்பின் கனியாகவும் கருதி மனதையும், இதயத்தையும் இணைத்து நிறைவேற்றுவதில் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும்" (எண் 49).

**தூய யோசப்வாஸ் ஒரு மிகச் சிறந்த மறைபரப்பாளர் :**

தூய யோசப்வாஸ் வாழ்ந்த காலத்தில் மறைபரப்பாளர்களாகக் காணப்பட்டவர்கள் அனைவரும் ஐரோப்பியர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் மேற்குலகிலிருந்து விசுவாசத்தினைக் கொணர்ந்தார்கள். ஆனால், தூய யோசப்வாசிடம் ஒரு ஆசிய மறைபரப்பாளராக தமது பக்கத்து நாட்டிற்குப் புறப்பட்டு, நற்செய்தியை அறிவித்து, துன்புறுத்தப்பட்ட மக்களின் விசுவாசத்தினைக் கட்டியெழுப்பும் ஒரு அழகான உதாரண செயலைக் காணமுடிகிறது. அவர் ஆன்மாக்கள் மட்டில் கொண்டிருந்த நம்பமுடியாத தாகம் பற்றித் தியானிப்பது மிகவும் ஆச்சரியப்படுத்தும் விடயமாகும். இலங்கை மக்களின் துன்பகரமான நிலையானது ஒல்லாந்தப் படைகளின் துன்புறுத்தல்களால் மோசமடைந்த காலத்தில் அதனைக் கேள்விப்பட்ட இளம் குருவான யோசப்வாஸ் அடிகள் சிதறிப்போன மந்தைகளைத் தேடிச் செல்ல உறுதிப்பாடு கொண்டதோடு, இறை பராமரிப்பில் உறுதியான நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

யோசப்வாஸ் வேறு எவரிடமிருந்தும் இவ்வகையான பலத்தினையும், வளத்தினையும் பெறவில்லை. அவர் ஒரு துண்டில் சுற்றிக் கட்டப்பட்ட திருப்பலிப் பாத்திரங்களையும், தாம் அணிந்திருந்த ஒரு கூலித்தொழிலாளியின் உடைமைகளையும் மட்டுமே தம்வசம் கொண்டிருந்தார். அவரது ஒரேயொரு தோழன் குன்பி இளைஞனான ஜோன் எனும் பணியாள் மட்டுமே ஆவார். அவர் இலங்கையிலே தரையிறங்கிய போது ஒரு பிச்சைக்காரனைப்போலப் பிச்சை எடுத்து ஏனைய ஏழை மக்களால் கொடுக்கப்பட்ட உணவினையே உண்டு வயிறாறினார். அவர் கண்டி இராசதானியில் ஒரு கைதியாகவே நுழைந்தார். அவர் ஒரு உளவாளி எனச் சந்தேகிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் சிறைவாசம் அனுபவித்தார். ஆனால், இவ் அனைத்துச் சவால்களையும் அவர் வாய்ப்புக்களாகவே மாற்றிக் கொண்டார். அவர் இறை ஏவுதலிலும், செபத்திலும் கொண்டிருந்த அந்த நம்பிக்கையினால் அரசனின் மனதினை வெல்ல முடிந்தது. அன்று காணப்பட்ட மறைபோதக வழிமுறைகளிலிருந்து வேறுபட்டதாக யோசப்வாஸ் அவர்களின் மறைபோதக வழிமுறைகள் காணப்பட்டன. இவரது மறை போதகப் பணியானது காலனி அரசுகளாலே உறுதிப்படுத்தப்படவுமில்லை, உதவிகளும் கொடுக்கப்படவில்லை. அவர் தமது தூய்மையான வாழ்வு, எளிமை மற்றும் மக்களுடனான நெருங்கிய உறவின் மூலமே மக்கள் மத்தியில் ஏற்புடைமையைப் பெற்றதோடு ஒரு ஆணித்தர பௌத்தனான அரசன் இரண்டாம் விமலதர்மசூரியனின் ஆதரவினையும் பெற முடிந்தது.

தொடரும் .....

## உலகெங்கும் மரியாளின் புகழ்... 25

### எலெட்ஸின் இறையன்னை:

ரஷ்யா



எலெட்ஸின் இறையன்னை திருவுருவமானது, 1060ஆம் ஆண்டில் தோன்றியது. ரஷ்யாவின் ஆர்லாவ் மாகாணத்தில் எலெட்ஸ் என்ற நகரில் ஸ்மோலெனஸ் இறையன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பேராலயத்தில் இத்திருவுருவம் தோன்றிய காரணத்தால் இந்தப் பெயர் அதற்கு வந்தது. எலெட்ஸின் இறையன்னை திருநாள் தினமாக ஜனவரி 11ஆம் திகதி (பாரம்பரியமிக்க ஆர்த்தடக்ஸ் நாட்காட்டியில் மற்றும் புதிய நாட்காட்டியில் ஜனவரி 24ஆம் திகதி) அனுசரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

க.பொ.த. சா/தர மாணவர்களுக்கானது

தரம் - 11 பாடங்கள் 17-22

பகுதி - II

• போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

04)

02. பெற்றோருக்குரிய கடமைகள் எவை?
- தமது பிள்ளைகளுக்கு திருமுழுக்கு கொடுத்து திருச்சபையின் அங்கத்தவராக பிள்ளைகளை வளர்த்தல்.
- செபம், மறை உண்மை, கிறிஸ்தவ வாழ்வு பற்றி கல்வியூட்டல்
- குடும்பமாக பிள்ளைகளை செபத்தினூடாக இறைவனுடன் உரையாட வைத்தல்
- பிள்ளைகளுக்குத் தேவையான கல்வியறிவு ஒழுக்கம் கற்பித்தல்
- அன்பு, இரக்கம், பொறுமை, விட்டுக் கொடுத்தல் போன்ற பண்புகளைப் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையாக எடுத்துக்காட்டல்.

03. பிள்ளைகளின் கடமைகள் எவை?
- பெற்றோருக்கு அன்பும், மரியாதையும் செலுத்துதல்.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து செவிமடுத்தல்.
- தமது நடத்தைகளால் தம் பெற்றோருக்கும் தம் சமூகத்துக்கும் பெருமை சேர்த்தல்.

04. அதிகாரிகளின் கடமைகள் எவை?
- தமது பொறுப்பை நேர்மையான முறையில் நிறைவேற்றுதல்.
- இன, மத, உயர்நிலை வித்தியாசமின்றி மக்களின் தேவைகளுக்காக உழைக்க வேண்டும்.
- பணம், பதவி பெயர் எடுக்கும் நோக்கின்றி நற்சமூகத்தை உருவாக்கப் பணியாற்ற வேண்டும்.
- நாட்டின் சமயத் தலைவர்களின் அறிவுரைகளின் பேரில் தமது பணியை மேற்கொள்ள வேண்டும்.

05. மக்களின் கடமைகள் எவை?
- அதிகாரிகளை மதித்து கீழ்ப்படிதல்.
- சம்பளத்திற்கு அடிமையாகாமல் உண்மையாகப் பணியாற்ற வேண்டும்.
- அதிகாரிகளைப் பாராட்டி அவர்கள் பணிக்கு உதவ வேண்டும்.
- பணி சிறக்க பயனுள்ள ஆலோசனைகளை வழங்குதல்.

05)

01. சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது என இயேசு கூறுவதற்கான காரணம்:
- சிறுவர் உள்ளங்களில் பொய்யோ, வஞ்சனையோ, பொறாமையோ இல்லை. அவர்களது உள்ளம் தூய்மையானது.
- நாமும் குழந்தைகள் போல் தூய உள்ளத்தோடு இருக்க வேண்டும். நல்லவற்றை கேட்க வேண்டும், பேச வேண்டும், சிந்திக்க வேண்டும் என்பதற்காக.

02. குடும்ப வாழ்வில் தூய்மைக்கும் உடல் உள தூய்மைக்கும் எதிரான செயற்பாடுகள் யாவை?
- ஓரினச் சேர்க்கை
- குடிவெறி
- பிறருடன் தகாத உறவு
- தகாத பத்திரிகைகள் பார்த்தல்
- ஆபாசப் படங்கள் பார்த்தல்

03. ஒழுக்கமான தூய வாழ்க்கை வாழ்வதற்கு நீர் தவிர்க்க வேண்டிய செயல்கள் எவை?

ஆபாசப் பாடங்கள், போதைவஸ்து பாவினை, தகாத உறவு, ஓரினச் சேர்க்கை, தகாத பத்திரிகைகள் படித்தல், காம இச்சையைத் தூண்டும் நடனங்கள், தீய நண்பர்களுடன் சேர்தல், தீய சிந்தனைகள், பால் உணர்வுகளை நினைத்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

04. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் என்று கிறிஸ்து போதித்தமைக்கான காரணம் என்ன??

கிறிஸ்தவன் தன் நடத்தையில் தூய்மையான வாழ்வைக் கடைப்பிடித்தல் அதி உயர்ந்த மனித பண்பாகும் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1 சாமுவேல் 1:1-18

167

பரிசுப் போட்டி

திருவிவிலியம் கற்போம்

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.05.2017

(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. ..................... மலைநாட்டைச் சார்ந்த இராமாத்தயிம் சோப்பிமில் எல்கானா எனும் ஒருவர் இருந்தார். இவர் சூப்பின் மகனான தோகூலின் மைந்தனான எலிகூபின் புதல்வனான எரொகாமின் மகன்.

அ) எப்ராயிம் ஆ) யூதேயா இ) இஸ்ரயேல்

2. எல்கானாவுக்கு அன்னா, பெனின்னா என்ற இரு மனைவியர் இருந்தனர். பெனின்னாவுக்குக் குழந்தைகள் இருந்தனர். அன்னாவுக்கோ குழந்தைகள் இல்லை. எல்கானா ஆண்டு தோறும் ..................... ஆண்டவரை வழிபடுவார்.

அ) எப்ராயிமில் ஆ) சீலோவில் இ) ஜெருசலேமில்

3. அங்கே ஆண்டவரின் குருவான ஏலியின் இரு புதல்வர்கள் ஒப்னியும், பினகாசும் இருந்தனர். எல்கானா, தாம் பலி செலுத்திய ....................., தம் மனைவி பெனின்னாவுக்கும் அவள் புதல்வியருக்கும் பங்கு கொடுப்பதுண்டு.

அ) வருடத்தில் ஆ) காலத்தில் இ) நாளில்

4. எல்கானா அன்னாமீது அன்புள்ளவராயிருந்தும் அவருக்கு ..................... பங்கையே அளித்தார். ஏனெனில், ஆண்டவர் அவரை மலடியாக்கியிருந்தார். அதனால், அவரது சக்களத்தி துன்புறுத்தினாள். இது ஆண்டுதோறும் நடந்தது.

அ) பாதி ஆ) ஒரே இ) அரை

5. எல்கானா அழும் அன்னாவை நோக்கி "ஏன் அழுகிறாய்? நான் உனக்குப் பத்துப் புதல்வரை விட மேலானவன் அன்றோ?" என்பார். ஒருநாள் அவர்கள் சீலோவாலில் உண்டு குடித்த பின் ..................... எழுந்தார்.

அ) எல்கானா ஆ) அன்னா இ) பெனின்னா

6. குரு ஏலி, ஆண்டவரின் கோவில் முற்றத்தில் அமர்ந்திருந்தார். அன்னா மனம் கசந்து அழுது புலம்பி ....................., "படைகளின் ஆண்டவரே! நீர் என் துயரத்தைக் கண்ணோக்கி, எனக்கு ஓர் ஆண் குழந்தையைத் தாரும்" என்றார்.

அ) கடவுளிடம் ஆ) யாவேயிடம் இ) ஆண்டவரிடம்

7. மேலும் அன்னா "அவனை அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன். அவன் தலைமேல் ..................... படாது" என்று மன்றாடியபோது, ஏலி அவருடைய வாயைக் கவனித்தார்.

அ) சவரக்கத்தியே ஆ) கத்தியே இ) சீப்பே

8. ஏலி அவரை ஒரு ..................... எனக்கருதி, "எவ்வளவு காலம் நீ குடிகாரியாய் இருப்பாய். மது அருந்துவதை நிறுத்து" என்று சொல்ல, அன்னா "இல்லை என் தலைவரே! நான் உள்ளம் நொந்த பெண். எதையும் அருந்தவில்லை. ஆண்டவரிடம் மன்றாடினேன்" என்றாள்.

அ) பிச்சைக்காரி ஆ) குற்றவாளி இ) குடிகாரி

9. அன்னா தொடர்ந்து "உம் அடியாளை ஒரு கீழ்த்தரப் பெண் எனக் கருதவேண்டாம். ஏனெனில், என் துன்பமிகுதியால் இதுவரை பேசிக்கொண்டிருந்தேன்" என்றதைக் கேட்ட ஏலி "மனநிறைவோடு செல். கடவுள் உன் ..................... கேட்டருள்வார்" என்றார்.

அ) மன்றாட்டை ஆ) விண்ணப்பத்தை இ) வேண்டுகோளை

10. அன்னா "உம் அடியாள் உம் கண்முன்னே ..................... பெறுவாளாக!" என்று கூறித் தம் வழியே சென்று உணவு அருந்தினார். இதன்பின் அவர் முகம் வாடியிருக்கவில்லை.

அ) அருள் ஆ) இரக்கம் இ) நீதி

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் – 167

**பரிசுப் போட்டி**




(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. தேசிய கொடியை முதன் முதல் அறிமுகஞ்செய்த நாடு :
(ஸ்பெயின் - இங்கிலாந்து - டென்மார்க்)

2. "தங்கப்படுகை நிலம்" என அழைக்கப்படும் நாடு :
(அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா - சிங்கப்பூர்)

3. தினமும் கால் பாதம், கைகளில் தேய்த்துக் கழுவ மென்மை தருவது:
(நல்லெண்ணெய் - கடுகெண்ணெய் - ஒலிவெண்ணெய்)

4. ஒருவன் வாழும் சமூகக் கலாச்சாரம் மற்றும் அதன் அனுபவத்தின் பெறுபேறு :
(ஆளுமை - தலைமைத்துவம் - ஆட்சி)

5. 'அகல இருந்தால் நிகள உறவு, கிட்டவந்தால் ..............................'
(சண்டை - நெருக்கம் - முட்டப்பகை)

6. ஏவல் ஒருமையை உருவாக்கும் ஒரு வினையடி :
(விலங்கு - எழுது - பாராதே)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 167
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் – 165 விடைகள்

உறவினர், அறுவடையாகும், இல்வாழ்வில், போர்வையால், ஆண்டவர், போர்வையை, முறை உறவினர், நகோமி, நிலத்தை, வழக்கம்

## அறிவை வளர்ப்போம் – 165 விடைகள்

1. கிரேக்கம்
2. இந்தோனேஷியா
3. 23,040
4. 1950.10.07
5. பச்சை
6. முன்றில்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி I ம் பிரிவில் 300/= பரிசு பெறுவோர்**

- றெ. றொஸின் வினோஸ்,
24, கணக்கப்பிள்ளை வீதி,
நாவற்குடா.

- S. குளோரி மரிஷா
இல. 71, சின்ன உப்போடை
மட்டக்களப்பு.

- அமலின் சூரியகுமார்,
14/1, கென்றிக் ஒழுங்கை,
மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 117 முடிவுகள்**

- **முதலாம் பரிசு – 400/=**
S. குளோறி மொன்ஷரா
71, சின்ன உப்போடை வீதி,
மட்டக்களப்பு.

- **இரண்டாம் பரிசு – 300/=**
ச. ஹெலன் பிரீத்திக்கா,
15/11, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

- **மூன்றாம் பரிசு - 200/=**
சு. வினோராஜ்,
புனித சூசையப்பர் சிறிய குருமடம்,
திருப்பெருந்துறை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுவட்டுப் போட்டி

இவ்வாண்டு தூய யோசப் வாஸ் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் மட்டக்களப்பு மறைமாநில சமூகத் தொடர்பு நிலையத்தினால் நடாத்தப்படும் தூய யோசப் வாஸ் தொடர்பான பாடல் இறுவட்டுப் போட்டி :

**குறிப்பு:**

1. ஒருவர் எத்தனை பாடல்களாயினும் எழுதி, இசையமைத்து இறுவட்டாக ஒப்படைக்க முடியும்.
2. பாடல்களை யூன் மாதம் 1ந் திகதிக்கு முன்னதாக மட்டக்களப்பு மறைமாநில சமூகத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.
3. தூய யோசப் வாஸ் பற்றிய வரலாற்று நிகழ்வுகள் ஒருசிலவற்றையேனும் இப்பாடல்கள் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.
4. இப்பாடல்கள் பல்லவியுடன் இரு சரணங்களை அடக்கியதாக இருத்தல் வேண்டும்.



**பரிசுகள்**

| | |
|---|---|
| 1ம் பரிசு | : 10,000/= |
| 2ம் பரிசு | : 7,500/= |
| 3ம் பரிசு | : 5,000/= |

# குறுந்திரைப்படப் போட்டி

"குடும்பங்களை நெறிப்படுத்திய தூய யோசப் வாஸ்" என்ற தலைப்பங்கத்தை உள்வாங்கியதாக இன்றைய குடும்பங்களில் ஏற்படக்கூடிய சவால்களையும், அவற்றைச் சுமுகமாகக் கையாளக்கூடிய வழிகளையும் உள்ளடக்கியதாக 7 நிமிடங்கள் முதல் 12 நிமிடங்கள் வரையிலான குறுந்திரைப்படத்தினைத் தயாரிக்க உங்களை அழைக்கின்றோம்.

**குறிப்பு:**

1. யூலை மாதம் 1ந் திகதிக்கு முன்னர் குறுந்திரைப்படத்தை மட்டக்களப்பு மறைமாநில சமூகத் தொடர்பு நிலையத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.



- **புதிய ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.**

**பரிசுகள்**

| | |
|---|---|
| 1ம் பரிசு | : 20,000/= |
| 2ம் பரிசு | : 15,000/= |
| 3ம் பரிசு | : 10,000/= |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

இயக்குநர்,
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். 44,
ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org